# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 27 திங்கட்கிழமை (13-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 249


## நகர்ப் பகுதியை உலுக்கிய குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணம், கந்தர் மடம் ஆலடிப் பகுதியில் நேற்று இரவு 10.45 மணி அளவில் இருகுண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன.

அடுத்தடுத்துக் கேட்ட இந்தச் சத்தங்களை அடுத்து அப்பகுதி தனியார் ஆஸ்பத்திரிஒன்றுக்கு காயம் அடைந்த படையினர் அவசரம் அவசரமாகக் கொண்டுவரப்பட்டனர் என்றும்—

பின்னர் அவர்கள் வாகனம்

(12ஆம் பக்கம் பார்க்க)



வெற்றி உறுதி போன்று போர்கோஷமும் நீளப் போகுது போல...!

## புதைகுழிகளைத் தோண்டும் பணி சுதந்திரமாக மேற்கொள்ளப்படுகிறது

### சர்வதேச மனித உரிமை அமைப்பு பிரதிநிதிகள் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

செம்மணி, அரியாலை பகுதிகளில் உள்ளதாகக் கருதப்படும் பாரிய மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணி அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் சுதந்திரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்கண்டவாறு புதைகுழிகளைத் தோண்டும் பணிகளில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு உறுப்பினர்கள்தெரிவித்தனர்.

கொழும்பு, லங்கா ஒபரோய் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

செம்மணியில் புதைகுழி தோண்டும் பணிகளை ஒவ்வொரு நாளும் நாம் அவதானித்து வருகிறோம். அந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள உள்ளூர் நிபுணர்களுடன் அவர்களது பணிகள் தொடர்பாக நாளாந்தம் கலந்துரையாடி வருகின்றோம். அந்த விவரங்கள் இரகசியமாகப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாலம்பிட்டியிலிருந்து வடக்கே படை நகர்வு

## "போர்க்கோஷம் 5" நேற்று ஆரம்பம்

வவுனியா, செப்ரெம்பர் 13

வன்னியில் மன்னார் மாவட்டம் பாலம்பிட்டி என்ற பகுதியில் இருந்து வடக்கே பள்ளமடு, சிராட்டிக்குளம், பெரிய மடு ஆகிய பகுதிகளை நோக்கி படையினர் புதிய இராணுவ நகர்வு ஒன்றை நேற்று ஆரம்பித்தனர்.

"போர்க் கோஷம் – 5" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கை நேற்றுக் காலை 5.30 மணிக்கு ஆரம்பமானது என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

வடக்கு நோக்கி முன்னேற முயன்ற படையினரை வழி மறித்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அங்கு பெருஞ் சமர் மூண்டதாகவும் —

இந்த மோதல்களின்போது 18படையினர் உயிரிழந்துள்ளதாகவும் —

150 படையினர் காயமடைந்ததாகவும் —

அவர்களில் 48 பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தரப்பில் 53 பேர் உயிரிழந்துள்ளதாகவும் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

பாலம்பிட்டிக்கு வடக்கே 6 மைல் தொலைவில் உள்ள பெரியமடுவை நோக்கி நேற்று அதிகாலை விமானத் தாக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் முன்னேற்ற முயற்சி முறியடிப்பு என புலிகள் அறிவிப்பு

### சடலங்கள், ஆயுதங்களை கைப்பற்றியதாகவும் தெரிவிப்பு

வவுனியா, செப். 13

நேற்று அதிகாலை பள்ளமடு, பெரியமடு, சிராட்டிக்குளம் பகுதிகளை நோக்கி முன்னேற முயன்ற படையினரின் முயற்சியைத் தாம் முறியடித்து விட்டதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த மோதல்களின் போது உயிரிழந்த படையினரின் 20க்கு மேற்பட்ட சடலங்களையும் பெருமளவு ஆயுதங்களையும் தாம் கைப்பற்றி உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை மோதல்கள் இடம்பெற்றதாகவும்—

நேற்றைய மோதல்களில் தமது தரப்பில் 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும்— புலிகள் மேலும் அறிவித்துள்ளனர்.

அதேநேரம்—

மன்னார் மாவட்டத்தின் பாதுகாப்பு எல்லைக் கோட்டை நிர்ணயிப்பதற்காகவும் — பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விஸ்தரிக்கும் நோக்குடனும் இந்தப் படை நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(இ-6-7)

## பாண்டியன்குளம் பகுதியில் கிபிர் விமானங்கள் தாக்குதல்

வவுனியா, செப். 13

இராணுவக் கட்டுப்பாடற்ற பாண்டியன்குளம் மற்றும் பள்ளமடுப் பகுதிகள் மீது நேற்றுக் காலை முதல் இரு தடவைகள் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை மேற்படி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக பொதுமக்கள் பலர் இடம்பெயர்ந்தனர்.

(இ-7)

## மாத இறுதியில் 2 தடவைகள் கப்பல் சேவை

திருகோணமலை, செப். 13

திருகோணமலைக்கும் — காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இந்த மாத இறுதியில் இரு தடவைகள் இடம்பெறவுள்ளதாக திருகோணமலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாரிய புதைகுழி உள்ள செம்மணி உப்பளப் பகுதியில் தோண்டும் நடவடிக்கை இன்று

யாழ்ப்பாணம், செப் 13

செம்மணி உப்பளப் பகுதியில் உள்ளதாகக் கருதப்படும் பாரியபுதைகுழியைத் தோண்டும் பணி இன்று ஆரம்பமாக இருக்கின்றது.

சுமார் இருபது பேரின் சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு மூடப்பட்டதாகக் கருதப்படும் இந்தப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் கடந்த சனிக்கிழமை நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 6ஆம் திகதி தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஆறு நாள்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2மணியுடன் தோண்டும் பணி நிறுத்தப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் படைத் தளபதியாக வசந்த பெரேரா நியமனம்

### மேஜர் ஜெனரல் பலகல்ல கொழும்புக்கு

கொழும்பு, செப். 13

வன்னிப் படைகளின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா நேற்று முதல் நியமனம் பெற்றுள்ளார்.

இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாகவும், வன்னிப் படைகளின் தளபதியாகவும் இதுவரை பணியாற்றி வந்த மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல வன்னித் தளபதி பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்தே அவரது இடத்துக்கு மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா நியமிக்கப்பட்டார்.

இதுவரை வன்னிப் படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பலகல்ல இனிமேல் இராணுவ சிரேஷ்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர நியமனம் கோரி பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நாளை வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தம்மை நிரந்தரமாக்கக் கோரி நாளை செவ்வாய்க்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபடவுள்ளனர்.

மேற்படி வேலைநிறுத்தம் குறித்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றும் இளம் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழ் இளைஞர்கள் கொழும்பில் சித்திரவதை

### சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

தலைநகர் கொழும்பில் பொலீஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று தமிழ் இளைஞர்கள் கடுமையாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகவும் அவர்களுக்கு அவசரமாக மருத்துவ உதவி தேவைப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை வெள்ளிக்கிழமை தெரிவித்திருக்கிறது.

மாணவரான ஸ்ரீராம், அந்தோனிப்பிள்ளை பினோத் விமல்ராஜ், சிவஞானசுந்தரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

காரைநகர் மணிவாசகர் சபை
கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம்

# திறப்பு விழா

இடம்: காரைநகர் சம்பந்தர்கண்டி
வி. மு. பரமநாதர் கட்டடம்

காலம்: ஆவணித் திங்கள் 29ஆம் நாள்
15-09-99 புதன்கிழமை மாலை 3.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செ. தேவதாசன் — தலைவர்
து. நாகேந்திரன், ந. தர்மையா — இணைச் செயலாளர்கள்

காரைநகர் மணிவாசகர் சபை,
காரைநகர். (68956)

---

சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம் (வ-து)
சுன்னாகம்

## அறிவித்தல்

சங்கத்தில் இசுசு லொறியிலிருந்து கழற்றப்பட்ட உடற்கோப்பு விற்பனைக்குண்டு. பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கேள்விப்பத்திரங்களை சங்கத் தலைமை நிலையத்தில் வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம் கேள்விப் பத்திரங்கள் 20.9.99 ஆம் திகதி பிற்பகல் 4 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். (சி/8880)

---

## உத்தியோகத்தர் தேவை
### (ஒப்பந்த அடிப்படை)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் காப்புறுதி வேலைகளைச் செய்வதற்கு காப்புறுதி வேலையில் அனுபவம் உள்ள உத்தியோகத்தர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 17-09-99 விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: மாவட்டச் செயலாளர், இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலாளர்
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி/8887)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பரான
**குணசிங்கம் ஞானேந்திரன்** (குட்டி)
(உரிமையாளர்: கோபிகா ஆடையகம்)

அவர்களது மறைவை முன்னிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சியானாஸ்,**
இல. 77, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

(68971)

---

## பற் சிகிச்சை

நெடுந்தீவுப் பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி பல் பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

பற் சூத்தையுடைய மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளதாகவும், இச் சிகிச்சை இரண்டு தினங்கள் நடைபெறும் எனவும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி வி.கே. வருணநாதன் தெரிவித்துள்ளார்.

(ஐ-167)

## ஆலயம் புனரமைக்கப்படும்

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக புனருத்தாரணம் செய்யப்படாத நவாலி சிந்தாமணி விநாயகர் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட உள்ளது.

மேற்படி புனருத்தாரண வேலைகளை பிரதேச செயலர், அரசாங்க அதிபர் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. [ஐ-185]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 - 11 - 87 | மறைவு 16 - 09 - 96

### வி. திவ்வியா

முன்னூறு நாள் சுமந்து முத்தெனவே உனை ஈன்று
முகிழ்த்து மணம் பரப்புவாய் என்றிருந்தோம்
— முல்லையே
மணமிழந்து போனாயே — மலரே, எம்
மூச்சு நிற்குமட்டும் மணம் கமழும் உன் வாசம்

சிவராஜா குடும்பத்தினர்

பாடசாலை வீதி,
நாவற்குழி. (68991)

---

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாணத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

01. பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண, நிர்மாணத்துறைத் திணைக்களப் பிரதம எந்திரி அலுவலகக் கேள்விச் சபையினரால் 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 05 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை பிரதம எந்திரி அலுவலகம், நிர்மாணத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக இக் காரியாலயத்தில் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு எம்— 9 அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தினரால் (இக்ராட்) வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாண நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிவரை கீழ்க்காட்டியவாறு கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வித் தொகை | மீளளிக்கப்படாத கேள்வித் தொகை |
|---|---|---|
| அ. பளை வைத்தியசாலை அம்புலன்ஸ் தரிப்பு நிலையம் அமைத்தல் | 6,000/- | 250/- |
| ஆ. வல்வெட்டித்துறை வைத்தியசாலை அம்புலன்ஸ் தரிப்பு நிலையம் அமைத்தல் | 6,000/- | 250/- |
| இ. புங்குடுதீவு வைத்தியசாலை அம்புலன்ஸ் தரிப்பு நிலையம் அமைத்தல் | 6,000/- | 250/- |
| ஈ. காரைநகர் வைத்தியசாலை அம்புலன்ஸ் தரிப்பு நிலையம் அமைத்தல் | 6,000/- | 250/- |
| உ. பருத்தித்துறை வைத்தியசாலை அம்புலன்ஸ் தரிப்பு நிலையம் அமைத்தல் | 6,000/- | 250/- |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பிற்பகல் 4 45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி
பிரதம எந்திரி,
நிர்மாணத் திணைக்களம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/8882]

---

இன்று (13-09-1999) சுழிபுரம் - பறாளாய்

# ஈசுர விநாயகரின் பாற்காவடித்தினம்

இன்னும் அகதி நிலையிலுள்ள தமிழ் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல இன்றைய பாற்காவடிகள் பலன் அளிக்கட்டும்,

சோழியூரான் - பிறைசூடிக்குரு

(68984)

---

கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

# ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்துவரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்

கொழும்பில் தங்குவதற்கு ஏற்ற மிகச் சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச் சாலையுடன் அமைந்த ஒரே இடம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்:

**HOTEL SEIVAMS [GUEST HOUSE]**

No. 29A, SANGAMITHA MAWATHA,
KOTAHENA, COLOMBO - 13.

T. P. No. 356522

(68954)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமவாய்ப்புச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றில்

கொழும்பு, செப். 13

கல்வி, வேலை வாய்ப்பு போக்குவரத்து, பொருள்கள், சேவைகள் போன்ற விடயங்களில் சகலருக்கும் சமவாய்ப்பு வழங்கும் வகையிலான உத்தேச சமவாய்ப்புச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படும்.

நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்,

தற்போதைய அரசமைப்புச் சட்டத்தின் 12 ஆவது பிரிவில் சமவாய்ப்பு உள்ளடக்கப்பட்டிருந்தாலும் கூட அது அரசாங்க சேவைக்கு மட்டுமே அமுல்செய்யப்படும் என வரையறுக்கப்பட்டுள்ளது. தனியார் துறையும் இதில் உள்ளடக்கப்பட வேண்டும்.

பொதுமக்கள் அரசதுறையினராலும், தனியார்துறையினராலும் எவ்வித பாகுபாடும் காட்டப்படாமல் சமமாக நடத்தப்படவேண்டும்.

கடந்த நாலரை மாதங்களாக இச்சட்டமூலத்தை உருவாக்கும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, பால், மொழி வேறுபாடுகளின்றி சமமாக மதிக்கப்படும் வகையிலேயே மேற்படிசட்ட மூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது— என்றும் அவர் தெரிவித்தார்-

இதேவேளையில் இச்சட்ட மூலம் திறம்பட செயற்படும் வகையில் சமவாய்ப்புக்குழு ஒன்றும் சமவாய்ப்பு நீதிமன்றம் ஒன்றும் நிறுவப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சமவாய்ப்புக் குழுவின் தலைவராக தேசிய பெண்கள் கமிஷன் தலைவர் கடமையாற்றுவார்.

ஏனைய உறுப்பினர்கள் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்படுவர்.

மேலும் சமவாய்ப்பு நீதிமன்றம் ஒன்றும் உருவாக்கப்படும். இது சாதாரண நீதிமன்றங்களை ஒத்த அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

இந்த நீதி மன்றில் ஓய்வு பெற்ற மேல் நீதிபதி ஒருவரும் இரு வழக்கறிஞர்களும்கடமை புரிவர்,

இவர்கள் எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் ஆகியோரின் பரிந்துரைப்படி நியமிக்கப்படுவர்.

சமவா ப்புக் குழுவில் முன்னர் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாவிட்டால் சமவாய்ப்பு நீதிமன்றத்திடம் பாரப்படுத்தப்படும்.

சமவாய்ப்புக்குழு, நீதிமன்றம் ஆகியவற்றின் செலவின் ஒரு பகுதியை அரசாங்கம் பொறுப்பேற்கும். மிகுதி நன்கொடை மூலம் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

## சமவாய்ப்புச் சட்டமூலத்துக்கு அமைச்சரவைக்குள் எதிர்ப்பு?

கொழும்பு, செப். 13

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச சகலருக்கும் சம வாய்ப்பு சட்டமூலத்திற்கு அமைச்சரவை மட்டத்திலேயே எதிர்ப்புகள் வலுவடைந்து வருவதாக தெற்கு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட சட்டமூலமானது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அரசு பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்பதே அமைச்சர்களின் ஏகோபித்த கருத்து என்றும்—

இச்சட்ட மூலம் கடந்த புதனன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக ஆராய்வதற்காக ஒரு குழு ஒன்றும் நியமிக்கப்பட்டதாகவும் —

அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட சட்ட மூலம் நிறைவேற்றப்படுமாயின் சகலருக்கும் சமவாய்ப்பு கிடைப்பதுடன், பாடசாலைகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படும்போது இன, மத, பால் வேறுபாடுகள் காட்டப்ப்படுமாயின் பெற்றோர் நீதிமன்றை நாடக்கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

## சமய சந்நிதிகளில்

சில்லாலை அன்னை வேளாங்கண்ணிமாதா ஆலய வருடாந்த உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை செவ்வாய்க்கிழமை நற்கருணைத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 7.மணிககு இளவாலை மறைமாவட்ட முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் திருப்பலிப் பூசையும் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தை சிறப்பாக நடத்துவதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் றோக் அடிகளார் செய்துள்ளார். (ஐ-135)

★ ★ ★

யாழ். குடாநாட்டிலுள்ள விநாயகர் விக்கிரகம் உள்ள பெரும்பாலான சைவ ஆலயங்களில் இன்று திங்கட்கிழமை மாலை விநாயகர் சதுர்த்தி திருவிழா (விநாயகர் அவதரித்த தினம்) விசேட அபிஷேகம், சங்காபிஷேகம், பூசை வழிபாடுகளுடன் நடைபெறும்.

இத்தினம் இந்துக்களின் முக்கியமான தினமாகும். பெரும்பாலான ஆலயங்களில் விநாயகர் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

மூளாய் வதிரன்புலோ அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர். ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய ரதத் தரிப்பிட (தேர் இருப்பிடம்) சாந்திவிழா இன்று திங்கட்கிழமை காலை 6 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தேர்த் திருப்பணிச் சபைத் தலைவரும் மல்லாகம்—பருத்தித்துறை மாவட்ட நீதிவானுமாகிய இ. த. விக்னராஜா வரவேற்புரையையும் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் ஆசியுரையையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரையையும் வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா வாழ்த்துரையையும் வழங்குவர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தேர்த் திருப்பணிச்சபையின் புதிய அலுவலகத்தைத் திறந்து வைப்பார். (இ-7-109)

## மருத்துவ...

(7ஆம் பக்கத் தொடர்)

யப்பான் நாட்டில் இரைப்பைப்புற்றுநோய் அதிகமாகக் காணப்பட்டது. அந்நாட்டு மக்களை இதைக் கண்டறிய கருவிகளைக் கண்டுபிடிக்கத் தூண்டியது, இதனால் உணவுக்குழாய்களைப்பற்றி அறிய பலதரப்பட்ட — Endoscopy Colonoscopy, Signoidoscopy, பித்தப்பை, சதையி பற்றி அறயவும் வைத்தியம் செய்யவும் — Endoscopic Retrograde Choledoco Pancratogramme என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. E. R. C. P மூலம் பித்தப்பை அறுவைச்சிகிச்சையை சிறு வெட்டுக் காயத்துடனும் சில நாள்கள் வைத்தியசாலைச் சிகிச்சையுடனும் செய்யக் கூடியதாகவுள்ளது. அத்துடன் பலதரப்பட்டவயிற்று, இடுப்பு நோய்களையும் கண்டறிந்து சத்திர சிகிச்சை செய்ய வசதி உண்டாகியுள்ளது.

(வளரும்)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, செப். 13

வலிகாமம் கல்வி வலயத்தில் தெல்லிப்பழைப் பிரிவுப் பாடசாலைகளுக்கு இடையே அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

★ இளவாலை மெய்கண்டான் வித்தி. எதிர் யூனியன் கல்லூரி

★ மல்லாகம் ம. வி. எதிர் தெல்லிப்பழை கட்டுவன் புலம் ம. வி.

### 18 வயதுப் பிரிவு

★ யூனியன் கல்லூரி எதிர் மல்லாகம் மகா வித்தி.

(உ-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் பிரிவுப் பாடசாலைகளுக்கு இடையே சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிமைதானத்தில் இன்று நடைபெறவுள்ள உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

★ சுன்னாகம் மயிலணி சைவ ம. வி. எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.

### 18 வயதுப் பிரிவு

★ ஸ்கந்தவரோதயா எதிர் இணுவில் இந்து

★ சுன்னாகம் மயிலணி சைவ ம.வி. எதிர் ஏழாலை ம.வி. (உ-152)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்தில் சங்கானைப் பிரிவு பாடசாலைகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

### 16 வயதுப் பிரிவு

★ பண்ணாகம் ம. வி. எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

★ வட்டுக்கோட்டை இந்து எதிர் அராலி இந்து.

### 18 வயதுப் பிரிவு

★ விக்ரோறியாக்கல்லூரி எதிர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை. (உ-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்தில் சண்டிலிப்பாய்ப் பிரிவு பாடசாலைகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை இளவாலைபுனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் 16 வயது, 18 வயதுப் பிரிவுகளில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியை எதிர்த்து பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாடும்.

நாளை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 16 வயது, 18 வயதுப் பிரிவு ஆட்டங்களில் சண்டிலிப்பாய்இந்துக் கல்லூரியை எதிர்த்து சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை விளையாடும். (உ-86-152)

★ ★ ★

யாழ். மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தினால் யாழ். வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்படும் வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மாலை துரையப்பா விளையாட்டரங்கு மைதானத்தில் நடைபெற உள்ளன.

இன்றைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி:- சென் அன்ரனிஸ் வி. க. எதிர் குருநகர் பாடுமீன் வி. க.

★ மாலை 4 மணி:- அரியாலை ஐக்கிய வி. க. எதிர் சென் நீக்கலஸ் வி. க.

(இ-6)

## செயற்பாட்டு அறை அமைப்பு

கொக்குவில், செப். 13

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிய கல்வி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் தரம் ஒன்றுக்கான செயற்பாட்டறை அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

இப்பாடசாலையின் மாடிக் கட்டடத்தில் புதிய வகுப்பறைக் கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. இக் கட்டடப்பணிக்கு கல்வித் திணைக்களம் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

(ஐ-69)


வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்

ஆதீன மகாசபை

யாழ். வர்த்தகர்கள், அடியார்கள் கவனத்துக்கு

12-9-99 ஞாயிறு உதயன் பத்திரிகையில் வெளிவந்த வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் இளைஞர் நற்பணிமன்றம ரத உற்சவத்தை முன்னிட்டு செய்யும் அன்னதானத்துக்கும் ஆலய நிர்வாகத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதனை ஆலய நிர்வாகம் தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றது.

அன்னதானம் செய்ய விரும்பும் வர்த்தகர்கள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும்.

- ஆதீன மகாசபை.

(சி/8913)



உ

வாகன உரிமையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!!



சகல வாகனங்களையும் சிறந்த முறையில் உங்கள் திருப்திக்கேற்ப சேவிஸ் செய்து கொள்ள

ஸ்ரீ காந்தா சேவிஸ் ஸ்ரேசன்

பலாலி வீதி கோண்டாவில் சந்தி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உங்களுக்காக 10. 09. 99 முதல் இயங்கி வருகின்றது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்



ஸ்ரீ காந்தா சேவிஸ் ஸ்ரேசன்

பலாலி வீதி
கோண்டாவில் கிழக்கு. (69006)

உரிமையாளர்:
ந. ஸ்ரீ காந்தராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் சேவை

சண்டிலிப்பாய், செப். 13
யாழ் மத்திய பஸ் நிலையத்திலிருந்து சில்லாலைக்கு 791 இலக்க பஸ் சேவை கடந்த மூதலாம் திகதி தொடக்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்பட்டு வருகின்றது. தினசரி நான்கு சேவைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.
[ஐ-135]

## பகுதிநேர...

(முதலாம் பக்கத் தொடர்)
வேண்டுமெனக்கோரி கடந்த காலங்களில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்து வந்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவும் மேற்படி ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமாக இதுவரை ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நிரந்தர நியமனத்துள் உள்வாங்கப்படாத எமக்கு கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் கல்விக் கருத்தரங்குகள் எதுவித பயனையும் தரப்போவதில்லை என்பதாலும்.

இதுவரை காலமும் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் பங்குபற்றிய எமக்குரிய கொடுப்பனவுகளோ வழங்கப்படவில்லை என்பதாலும் — நிரந்தர நியமனம் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை எந்தவொரு கருத்தரங்கிலும் பங்கு பற்றுவதில்லை என பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தீர்மானித்துள்ளனர் என்றுள்ளது (இ-7-139)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)
பட்டது. மீண்டும் இன்று காலை 9 மணிக்குத் தோண்டும் பணிகள் ஆரம்பமாகும்.

செம்மணி—கண்டி வீதியின் தெற்குப் பக்கமாக இருந்த புதைகுழிகளில் இருந்தும்—

செம்மணி — கண்டி வீதி நல்லூர் நாயன்மார்கட்டு வீதிச் சந்திப் மூலையில் செம்மணி சோதனை நிலையத்துக்குப் பின்புறமாக இருந்த புதைகுழிகளில் இருந்தும்—

எலும்புக்கூடுகளும் எச்சங்களும் தோண்டி எடுக்கப்பட்டதை அடுத்தே உப்பளப் பகுதியில் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

ஏற்கனவே தோண்டப்பட்ட இரு புதைகுழிப் பிரதேசங்களிலும் இருந்து 8 சடலங்களுக்குரிய எலும்புக்கூடுகளும் எச்சங்களும் மீட்கப்பட்டன என்பது தெரிந்ததே.
(இ-6)

## நகர்ப்பகுதியை ...

(முதலாம் பக்கத் தொடர்)
மூலம் அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டதாகவும் அறிய வந்தது மேலதிக தகவல் எதுவும் கிடைக்கவில்லை.
(இ)

## மாது...

(முதலாம் பக்கத் தொடர்)
பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வே. வேலும்மயிலும் அறிவித்துள்ளார்.

மேற்படி சேவைகள் இடம்பெறும்போது திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லவுள்ள பயணிகள் நாளை செவ்வாய்க்கிழமையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் தமது பெயர் விவரங்களை பிரதேச செயலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். (இ-7)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்)
ஸ்ரீகாந்தன் ஆகியோரே சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட தமிழ் இளைஞர்களாவர்.

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் வைத்து ஸ்ரீராம் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

திறந்த பல்கலைக்கழகத்தின் இறுதி வருட மாணவனான இவர் கடந்த ஒகஸ்ட் 25 இல் கொட்டாஞ்சேனையில் வைத்து கலாநிதி நீலன் திருச்செல்வம் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஓர் உறுப்பினர் என்று பொலிஸார் சந்தேகிப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பினோத் விமல்ராஜ் நியூ ஏசியா லொட்ஜில் வைத்து ஒகஸ்ட்டில் கைது செய்யப்பட்டார். கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது அவரது உடல் பூராவும் தாக்குதலுக்குள்ளாகியிருக்கிறது. நகத்தில் குண்டூசி ஏற்றப்பட்டிருக்கிறது மலவாயிலுக்குள் இரும்புக்கம்பி செலுத்தப்பட்டிருக்கிறது.

சிவஞானசுந்தரம் ஸ்ரீகாந்தன் கொழும்பில் குற்றத்தடுப்புப்பணியகத்தின் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். கைதாகி ஒரு மாத காலத்தின் பின்னர் செப்ரெம்பர் 4 இல் முதல் தடவையாக அவரைப் பார்வையிடுவதற்கு உறவினர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஐந்து நிமிடத்துக்கே இவ்வனுமதி கிடைத்தது. அவரின் முகம் வீங்கியிருந்ததை உறவினர்கள் கண்டனர். அவரால் நடக்க முடியவில்லை. காய்ச்சலினால் அவர் பீடிக்கப்பட்டிருந்தார் போலவும் தோன்றியது. கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இவர் வெள்ளவத்தையில் வைத்து ஒகஸ்ட் 4 இல் கைதானார். கயிற்றில் கட்டித் தொங்கவிடப்பட்டுத் தாக்கப்பட்டிருக்கிறார்.

— இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
[ஐ]

## பாலம்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்)
தல்களை நடத்தியவாறும் பெரும் எடுப்பில் மோட்டார் ஷெல்களை ஏவியபடியும் படையினர் தமது முன்னேற்ற நகர்வை ஆரம்பித்தனர்.

காலையில் புலிகள் பெருமளவில் எதிர்ப்பு எதனையும் காட்டவில்லை என்றும் —

பிற்பகலில் அங்கு பெரும் சமர் வெடித்துச் சண்டை மூண்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கைக்கு உதவும் வகையில் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து விடத்தல்தீவுப் பகுதிகளை நோக்கிப் படையினர் இடைவிடாத ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

நேற்றைய மோதல்களின் போது படையினர் தரப்பில் 26 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 165 பேர் காயமடைந்துள்ளதாகவும்—

உயிரிழந்த படையினரில் 5 பேரின் சடலங்கள் அனுராதபுரம் வைத்தியசாலையிலும் 21 பேரின் சடலங்கள் அனுராதபுரத்திலுள்ள மலர்ச்சாலைகளிலும் வைக்கப்பட்டுள்ளதாகவும் படை வட்டாரங்கள் கூறியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.
(இ-164-21-7-6)


## புறொயிலர் குஞ்சுகள்

இன்று (13-9-1999) மாலை புறொயிலர் குஞ்சுகள் ரூபா 45.00 விலையில் விநியோகிக்கப்படும். பிறிமா புறொயிலர் ஆரம்ப தீவனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- வை. சிவகுமார்
(அரவிந் வீடியோ அருகில்)
நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (68996)


## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் வேலை நிறுத்தமும் ஒன்று கூடலும்

காலம்: 14-09-1999 செவ்வாய்க்கிழமை

நேரம்: காலை 9-00 மணி

இடம்: புதிய உயர் கல்வி நிலையம்
(ஆரியகுளம் சந்தி)

இந்தக் கூட்டத்தில் மிக முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது சமூகம் தந்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம்,
யாழ் மாவட்டம்.

(சி/8912)

## கண்ணீர் அஞ்சலி

செல்வன்
### குணசிங்கம் ஞானேந்திரன்

(உரிமையாளர்: கோபிகா ஆடையகம், யாழ்ப்பாணம்)

''பாரினில் பிறந்த யாவரும் உயிர் துறப்பது உண்மையே
ஆனால் பாதியில் பறிப்பது
தான் என்ன அநியாயம் இறைவா?''

அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உரிமையாளர், ஊழியர்கள்.
விநாயகர் புடைவை அகம்.
சிறீராஜன் பான்சி ஹவுஸ்.

யாழ்ப்பாணம். (68966)

# நீலன் கொலைத் திட்டம்
# மட்டக்களப்பிலுள்ள புலிகள் முகாமில் தயாரிக்கப்பட்டதாம்!

கொழும்பு, செப். 13
தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வத்தின் படுகொலை தொடர்பான சதித்திட்டத்தை விடுதலைப் புலிகள் மட்டக்களப்பில் உள்ள தமது முகாம் ஒன்றில் வைத்தே தயாரித்தனர் என்று இராணுவப்பேச்சாளர் சுனில் தென்னக்கோன் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் அவரைக் கொலை செய்வதற்கான திட்டம் தீட்டப்பட்டதாகப் புலனாய்வு விசாரணைகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது எனவும் —

புலனாய்வு நிறுவனங்கள் கொலையாளியை அடையாளம் கண்டுள்ளன என்றும் —

திட்டத்தை நிறைவேற்ற விடுதலைப் புலிகளின் குழு ஒன்று கொழும்பில் இருந்து கடந்த ஜூலை மாதம் மட்டக்களப்புக்கு வந்திருந்தது எனவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## வவுனியாவில் துப்பாக்கிச் சூடு

வவுனியா, செப். 13
வவுனியா நகரப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2. 30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர்ஒருவர் காயமடைந்தார்.

எஸ். கே. என். கடை உரிமையாளரான காரைநகரைச் சேர்ந்த க. பவானந்தன் என்பவரே காலில் காயமடைந்தவராவார்.

இவர் தற்போது அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.
(இ-164-6)

## இராணுவம் பொலீஸ் மோதல்!

கொழும்பு, செப். 13
நீர்கொழும்பு—சீதுவ பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின்போது இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது

இந்த மோதலின்போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலீஸார் ஒருவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
(இ-7)

## நூலகத் திறப்பு விழா

யாழ்ப்பாணம். செப். 13
காரைநகர் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத் திறப்பு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 30 மணியளவில் இடம் பெறும்.

சிறப்புச்சொற்பொழிவுகள், வாழ்த்துரை, ஆசியுரை போன்ற நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

மூவாயிரம் நூல்களைக் கொண்டு இயங்கவுள்ள இந் நூலகமானது வாசகர்களுக்கு பெரிதும் பயனுடையதாக அமையுமென மணி வாசகர் சபை தலைவர் செ. தேவதாசன் தெரிவித்துள்ளார்.
(ஐ-ரி-73)

## புதைகுழிகளை ந

(முதலாம் பக்கத் தொடர்)
பேணப்படும்.

செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் சுமார் 100 சடலங்கள் வரை புதைக்கப்பட்டிருக்கலாம் என நாம் கருதுகின்றோம்.

இதுவரை அவற்றில் 10 சடலங்களுக்குரிய எலும்புக் கூடுகளும் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் ஆசியமன்றத்தின் இலங்கைப் பிரதிநிதி மார்க் லீட் மக்கெனன் மற்றும் நிபுணர்கள் வில்லியம் ஹக்லண்ட் செல்வி மெலிய கோர்ணேஸ், ரொபேர்ட்ஸ்ரைல் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-6)

## அமைப்பு

சண்டிலிப்பாய், செப். 13
'மாதகல் நலன்புரிச்சங்கம்' என்ற பெயரில் சங்கமொன்று கடந்த 5 ஆம் திகதி மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மாதகல் பகுதியில் பொது மக்களின் குறைபாடுகள், தேவைகள் ஆகியனவற்றை ஒரே குரலில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிப்பதற்காக இச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக செ. திருச்சிற்றம்பலமும் செயலாளராக பொ. சோமசுந்தரமும் பொருளாளராக க. வீரவாகுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-135)

## மெய்வன்மைப் போட்டிகள்

கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் மிருசுவில்தவசிகுளம் பாலர் பாடசாலைச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் க. செல்வகுமார் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு எரிக் றொசார் அடிகளும் சிறப்பு விருந்தினர்களாக போக்கட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் நீ.ம. ஜெயசிங், மிருசுவில்றோ.த.க.பாடசாலை அதிபர் எவ்.எக்ஸ். அன்ரன், மிருசுவில் கன்னியர் இல்ல பொறுப்பதிகாரி அருட்சகோதரி விற்றுவா ஆகியோரும் கலந்துகொள்வர்.
(இ-117)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை ஏற்பாடு செய்துள்ள மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் இவ்வாரம் இடம்பெறவுள்ளன.

இதன் முன்னோடி நிகழ்வுகளாக புதன்கிழமை காலை 9 மணிக்கு 10 ஆயிரம் மீற்றர் ஓட்டமும், 16ஆம் திகதி வியாழக்கிழமை 5 ஆயிரம் மீற்றர் ஓட்டமும் இடம்பெற உள்ளன. ஏனைய மெய்வன்மை நிகழ்வுகள் 18 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும்.

மெய்வன்மை நிகழ்வுகளில் பங்கு பற்றும் அனைத்துக் கழகங்களும் தமக்குரிய இலக்கங்களை புதன்கிழமை காலை 8.30 மணி முதல் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
(உ-6)

## வன்னிப்...

(முதலாம் பக்கத் தொடர்)
அதிகாரியாக மட்டும் பணியாற்றுவார். தனது கடமைகளைப் பொறுப்பேற்று அவர் கொழும்பு சென்றுள்ளார்.

மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா யாழ். குடாநாட்டின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்படலாம் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.
(இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 41 ஆம் இலக்கத்திலுள்ள
அவர்களது பணிமனையில் 13 09 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## வருந்துகின்றோம்

கடந்த 11-9-99 உதயனில் வெளிவந்த குணசிங்கம் ஞானேந்திரனின்(உரிமையாளர் கோபிகா ஆடையகம்) மரண அறிவித்தலில் திடீர் மரணம் என்பது அகாலமரணம் என வெளியிடப்பட்டதை இட்டு மனம் வருந்துகின்றோம்.

தகவல்:
(69008) குணசிங்கம் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகலிங்கம் இலட்சுமி அம்மா

(மண்டைதீவு)

மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யோகலிங்கம் இலட்சுமி அம்மா 12-09-99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற யோகலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெயலட்சுமி, வரதலெட்சுமி, இராஜலெட்சுமி, யோகலெட்சுமி, காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மாமியாரும் சிவகப்பிரமணியம், மூத்துலெட்சுமி, அப்பாப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான செல்லையா, அன்னப்பிள்ளை, அப்பாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலவாசுகி (மாணவி, யா. இ ம. க.), சத்தியா (சுவிஸ்), மீனலோஜினி (மாணவி, யா. இ. ம. க.), கார்த்திகா, கேசவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.09-99) பி.ப. 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல. 9, தேவாலய வீதி, யாழ்ப்பாணம். யோ, வரதலெட்சுமி (மகள்)
(69001)

## வேலுப்பிள்ளை முத்துராசா

நாயன்மார்கட்டு, நல்லூரைப் பிறப்பிடமாகவும் குருநாகலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முத்துராசா அவர்கள் 08-09-1999 அன்று குருநாகலில் காலமாகிவிட்டார்.

இவர் அரியமலரின் (குருநாகல்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற Dr. செல்வராசா, சண்முகராசா (Small), செல்வநாயகி, வாமசக்தி, சறோஜா, விஜயராணி (உப அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்), ஸ்கந்தராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுகன்யா, சுதாகர் (நோர்வே), சுமதி, சுகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலநாதன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), காலஞ்சென்ற ரதி ஞானதேவி, கணேசநாதன் (சவூதி), சிவதர்சினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் அகல்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செந்தூரான் (யாழ், பரியோவான் கல்லூரி, சாத்வீகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12-09-99) குருநாகலில் நடைபெற்றன,

தகவல்:
இ. கமலநாதன்
41/68 ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

பிறிச் வியூ,
தெதுறுஓயா,
தோரயாய,
குருநாகல்.
தொலைபேசி: — 037 - 26730
037 - 23071

(68993)

## திருமதி பரமேஸ்வரி கார்த்திகேசு

(உப-அதிபா, யா/ தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி—தெல்லிப்பழை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கார்த்திகேசு 12-09-99 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் கார்த்திகேசு (முன்னாள் ஆசிரியர், யா/ பன்னாலை சேர். கனகசபை வித்தி ) அவர்களின் அன்புமனைவியும் செல்வி. பிறேமறஜனி(இறுதியாண்டு, இராமநாதன் நுண்கலைப் பீடம், பகுதி நேர ஆங்கில ஆசிரியை, யா/மயிலணி சைவமகாவித்தி ) அவர்களின் தாயாரும் க ஐயாத்துரை, காலஞ்சென்றவர்களான க. கனகரத்தினம், க. பாலசுப்பிரமணியம் மற்றும் திருமதி த. தவஈஸ்வரி, திருமதி சி. இராஜேஸ்வரி, க. சிவராசா (பிரான்ஸ்), க. சந்திரசேகரம் (வைத்திய சாலை, பூவரசங்குளம்), க. குணசேகரம் (பிளோரிடா, அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வல்லிபுரம், காலஞ் சென்ற சின்னத்துரை, பா. சின்னம்மா, சுப்பிரமணியம், தங்கம்மா, மாணிக்கவாசகர், வைரமுத்து. இ. அன்னம்மா ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-09-99) திங்கட்கிழமை உடுவிலிலுள்ள அவரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் 12-00 மணியளவில் மருதனார்மடம் இந்து மயானத்துக்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கார்த்திகேசு
(கணவன்)
உடுவில்,
சுன்னாகம்.
(69003)

## கட்டுவன் மேற்கில் புனரமைப்பு பணி

யாழ்ப்பாணம், செப், 13

சமீபத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கட்டுவன் மேற்கு ஜே - 239 கிராம சேவையாளர் பிரிவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக நிதியுதவியுடன் பொதுக் கிணறுகள், சனசமூக நிலையம், வீதிகள் என்பன புனரமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

பத்து வருட காலமாக சேதமடைந்துள்ள இக்கிராமத்தைப் புனரமைப்பதற்கு வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் சத்தியசீலன், பிரதேச சபை தொழில் நுட்ப ஆலோசகர் சிவலோகநாதன், இப்பகுதி கிராம சேவையாளர் சிவலிங்கம் ஆகியோர் ஒருங்கிணைந்து செயலாற்றுகின்றனர். (ஐ)

## கண்காட்சி

வலிகாமம் தெற்கு, செப். 13

வலிகாமம் வலய அறவழி போராட்டக் குழுவினர் நடத்தும் வலிகாமம் அ வழி மழலைகள் பூங்காவின் உடற்பயிற்சிக் கண்காட்சி எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பீட மைதானத்தில் நடைபெறும். (ஐ-152)

## அபிவிருத்தி நிதியம்

இணுவில் பொது நூலகத்தினரால் கல்வி அபிவிருத்தி நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மேற்படி நூலகத் தலைவர் தே. திருமுருகராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்நிதியம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந் நிதியத்தின் மூலம் பிரதேசத்தில் உள்ள வறிய மாணவர்களுக்குக் கல்வி ஊக்குவிப்பு உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ- 27)


கடந்த வாரம் நடைபெற்ற
மாதாந்தப் பயிற்சி வினாத்தாள்கள்
(தரம் 2 — 11 வரை)
வாரம் ஒருமுறை நடைபெறும்
புலமைப் பரிசில் வினாத்தாள்களை
பெற்றுக் கொள்ளவும்.
BOND – யாழ்நகர்.
(69002)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று
சிவகுமார், வினித் நடித்த
மறக்காதேகண்மணி
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
(68664)

ராஜா
யாழ்ப்பாணம்
மம்முட்டி - தேவயானி
மற்றும் பலர் நடித்த
மறுமலர்ச்சி
10-30, 2-30
(சி/8841)

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜுன் - ரம்பா - மீனா
வடிவேலு நடித்த
செங்கோட்டை
(68977)


## போஷாக்கு தொடர்பாக ஐந்து பிரதிநிதிகளுக்குப் பயிற்சி

வலி.கிழக்கு, செப். 13

யாழ். மாவட்டத்தில் மக்களின் போசாக்கு நிலையை உயர்த்துவது தொடர்பான ஒருவார காலப் பயிற்சி நெறி ஒன்றில் கலந்து கொள்வதற்காக ஐந்து திணைக்களங்களின் பிரதிநிதிகள் கொழும்பு சென்றுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த 7 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

யாழ். மாவட்டத்தில் இருந்து பிராந்திய மாகாண சுகாதாரசேவை அலுவலர் எஸ். இராசேந்திரா, கல்வித் திணைக்களத்தில் இருந்து ஏ. யோகேஸ்வரி, கோப்பாய் பொது சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் செ. இந்திரராஜா, கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆ. கதிரமலைநாதன், கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு செயலாளர் எஸ். விக்கினேஸ்வரன் ஆகியோர் இக் கருத்தரங்கில் பங்குபற்ற கொழும்பு சென்றுள்ளனர்.

பயிற்சியை முடித்துக் கொண்டபின் இவர்கள் யாழ். மாவட்டத்தில் போசாக்கு நிலை குன்றியுள்ள பிரதேசங்களுக்குச் சென்று போசாக்கு நிலையை உயர்த்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-180)

## கண்ணீர்ப் பூக்கள்



### குணசிங்கம் ஞானேந்திரன்

(குட்டி – கண்ணன்)
(உரிமையாளர் — கோபிகா ஆடையகம்)

அவர்களின் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடையும் அதேவேளை அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நண்பன் வரனும்
வரனின் குடும்பத்தினரும்.
அராலி. (69004)

## மௌன அஞ்சலி

### குணசிங்கம் ஞானேந்திரன்

(குட்டி)
(கோபிகா ஆடையக உரிமையாளர்)

அன்னாரின் திடீர் மறைவு கேட்டு வேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய கற்பகவிநாயகப்பெருமானின் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

பிரம்மஸ்ரீ பா. முரளீதரக் குருக்கள்
சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர்
தேவஸ்தானம்
யாழ்ப்பாணம். (69007)

## கண்ணீரில் எரிகின்றோம் கண்ணா!

கோடி அழகுமுகம் கண்முன்னே ஓடிப்போனதே
= நண்பனே
கூடிக் கைகோர்த்து சிரித்த மகிழ்வெல்லாம்
சிதைந்து போனதே
காலை விடிந்து சிறு பொழுது கடக்கமுன்
கடுமிருள் கவிழ்ந்ததே – நண்பனேயுன்னை
''கண்ணா'' என்றழைக்க வாயசைக்கமுன்
கண்ணீரில் முடிந்ததே

படுக்கவைத்து பறையடித்தோம் – நண்பனே நீ
நடந்து திரிந்த தெருவெல்லாம் = நீ
பாடிச்சிரித்த பகிடிக்கதையெல்லாம் - சுடலையில்
கூடிஎரிய குனிந்தழுதோம் – உன்னை.

எரித்துத் தணிந்த கொடுநெருப்பு நண்பா எம்மை
எரித்து எரித்து எழுகிறதே இன்னும் இன்னும்!
எழுந்து வருவாயோ என்றேனும் ஒருநாள்
உன் இன் முகம் கண்டு தணிவதற்கே?

இல. 3, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி/8915)
நண்பர்களும்
''போஸ்கோ''வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடங்கள்

## யாழ்ப்பாணத்தில் உடனடியாக நியமனம் வழங்கப்படும்

புனர்நிர்மாணம், நீர்க்காப்பு, சாரம் கட்டுதல், மீள் கட்டுமானம்

ஆகிய துறைகளைக் கையாளும் நன்மதிப்புள்ள நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் நல்ல அனுபவம் உடையவர்களிடமிருந்து பின்வரும் துறைகளுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

சிவில் பட்டம் அல்லது அந்தத் துறைசார்ந்த முன்னறிவுடன்

**திட்ட முகாமையாளர் - திட்டப்பொறியியலாளர் - சிவில் மேற்பார்வையாளர்கள்**

இயந்திரவியல் அது சார்ந்த முன்னறிவுடன்

**பொறியியலாளர்**
(NDT - இயந்திரவியல்)

கொம்ப்ரசர்கள் பராமரிப்புக்கும் இயந்திர நிர்மாணத்துக்கும்

**பொறியியலாளர்**
(NDT - இயந்திரவியல்)

சாரம் கட்டுவதற்கு

**இயந்திரவியலாளர்கள் - பயிற்றப்பட்ட கொம்ப்ரசர் இயக்குநர்கள்**

கற்படை உடைத்தல், வெடி வைத்துத்தகர்த்தல் வேலைகளுக்கு திறமையுள்ள வேலையாளர்கள்

வர்த்தகத்துறை முன்னறிவுடன்

**வர்த்தகமுகாமையாளர், எழுதுநர்கள்**
(கணக்குகள், களஞ்சியம், ஆளணி)

**1999 செப்ரெம்பர் 20 ஆம் திகதி**
**109, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.**
என்ற விலாசத்துக்கு நேர்முகப்பரீட்சைக்கு வரவும்.

**விளம்பரதாரர்**
**தபால் பெட்டி இல. 1932,**
**கொழும்பு.**

29 - 8 - 99 இல் உதயன் பத்திரிகையில் வெளியான இலக்கம் 934, 935 விளம்பரங்களுக்கு விண்ணப்பித்தவர்களும் நேரில் வரவும்.

(சி/8902)


# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி

## நாகேந்திரம் நிஷாலினி

(பரு/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை 2000 ஆண்டு உயர்தர கணிதப் பிரிவு மாணவி)

மலர்வு 21 - 05 - 1981

உதிர்வு 25 - 08 - 1998

மூவுடலுக்கு ஓர் உயிராய் நின்ற உன் ஆவியைப்
பிரித்ததும் நடைப்பிணமானோம்
ஆசைகாட்டி மோசம் செய்வார் எனயார் நினைத்தார்
எமது அந்திமக் கடனைச் செய்ய இருந்த உனை
எம்மைக்கடன் செய்ய வைத்து விட்டாய்!
பாசமுள்ள 'சுகி'யே எம்மை எப்படி மறந்து
சென்றாய்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடி நிற்கும்
பெற்றோர், உறவினர்கள்.

சுகிஸ்தான்,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் அரசாங்கத் திணைக்களங்களில், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட உள்ளூர் பொது நிறுவனங்களிடம் இருந்தும் சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவராகிய என்னால் 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு 24-09-99 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கேள்விச்சபையினரால் பரிசிலனைக்கு எடுக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி சமுகமளிக்கலாம்,

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''தலைவர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்'' என்ற முகவரிக்கு இணைப் பிரதியைப் ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் 23-09-99 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும் அல்லது மூலப்பிரதியை நேரடியாகக் கேள்விப்பெட்டியில் இடவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

அட்டவணைப்படி மீளளிக்கக்கூடிய வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத பத்திரப் பணத்தினையும் செலுத்துவதன் பேரில் 22-09-99 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலதிக விவரங்கள் தேவைப்படின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | வைப்புப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|---|
| | கச்சாய் உப-அலுவலகப் பிரிவு | | |
| 01. | கொடிகாமம் பஸ் நிலையம் திருத்தம் | 1000/- | 200/- |
| 02. | கொடிகாமம் பொதுநூல் நிலைய துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் அமைத்தல். | 1000/- | 200/- |
| 03. | தாய் சேய் நிலையக் கட்டடம் திருத்தம் | 500/- | 100.- |
| 04. | கச்சாய் தாய் சேய் நிலைய மலசலகூடம் அமைத்தல் | 500/- | 100/- |
| 05. | கொடிகாமம் புகையிரத நிலைய வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 06. | மருதடிப் பிள்ளையார் கோயில் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 07. | கச்சாய் புங்கடி வீதி திருத்தம் | 1000/- | 100/- |
| 08. | அல்லாரை ஊரெல்லை வெள்ளாம்போக்கட்டி இணைப்பு வீதி திருத்தம். | 1000/- | 200/- |
| 09. | கச்சாய் அல்லாரை வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 10. | முருங்கையடி வீதி திருத்தம் | 1000/- | 20 /- |
| 11. | கெற்பேலி பாலாவி ஊரெல்லை வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 12. | சம்பாவெளிப் பிள்ளையார் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 13. | தவசிகுளம் விநாயகர் கோயில் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 14. | தவசிகுளம் மாதாகோயில் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 15. | தவசிகுளம் நாச்சிமார் கோயில் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 16. | பாலாவி வடக்கு பிள்ளையார் வீதி பொதுக் கிணறு அமைத்தல் | 500/- | 100/- |
| 17. | கொடிகாமம் சந்தை காளிகோயில் வீதி தாரிடல் | 2000/- | 250/- |
| 18. | தவசிகுளம் அண்ணமார் கோயில் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| | சாவகச்சேரி உப அலுவலகப் பிரிவு | | |
| 19. | மட்டுவில் செல்லப்பிள்ளையார் முசிறி வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 20. | மட்டுவில் பொற்கொல்லர் சேச் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 21. | மட்டுவில் கமலாசினி பாடசாலை வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 22. | கோயிலாமனை வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 23. | புத்தூர்ச் சந்தி சியாமளா வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| | கைதடி உப அலுவலகப் பிரிவு | | |
| 24. | கைதடி உப அலுவலகத் திருத்தம் | 1000/- | 200/- |
| 25. | கைதடி கட்டைபறிச்சான் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 26. | கைதடி இந்தளை வீதி திருத்தம் | 1000/- | 150/- |
| 27. | பூதம்பத்தை வெள்ளவாய்க்கால் | 200/- | 50/- |
| 28. | கைதடி மேற்கு நேவத்தை கிணறு அமைத்தல் | 1000/- | 200/- |
| 29. | கைதடி கிழக்கு நடுக்குறிச்சி வீதி, திருத்தம் | 250/- | 100/- |
| | நாவற்குழி உப அலுவலகப் பிரிவு | | |
| 30. | தனங்கிளப்பு காரைதூ பிள்ளையார் மணற்காடு வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 31. | கேரதீவு வேலம்பிராய்க் கிணறு திருத்தம் | 200/- | 50/- |
| 32. | நாவற்குழி மாதா சிசு பரிபாலன நிலையத் திருத்தம் | 500/- | 150/- |
| 33. | நாவற்குழி உப அலுவலக பிற்பக்க வேலி திருத்தம் | 200/- | 50/- |
| 34 | நாவற்குழி மேற்கு பக்கி வீதி ச. ச. நிலைய திருத்தம் | 750/- | 150/- |
| 35: | மறவன்புலவு மருதடி சிவகவி ச. ச. நிலைய கிணறு அமைத்தல் | 500/- | 100/- |
| 36. | மறவன்புலவு பாடசாலை வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 37. | தனங்களப்பு கணேசா ச. ச. நிலைய கிணறு திருத்தம் | 500/- | 100/- |
| 38 | மறவன்புலவு சலவைத்தொழிலாளர் வீதி திருத்தம் | 750/- | 150/- |
| | மிருசுவில் உப அலுவலகப் பிரிவு | | |
| 39. | மிருசுவில் பொன்னுக்கோன் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 40. | மிருசுவில் சவக்காலை வீதி திருத்தம் | 500/- | 100/- |
| 41. | ஒட்டுவெளி பூக்கிணற்றடி வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 42. | உசன் தவசிக்குளம் இணைப்பு வீதி (சிற்றம்பலம் வீதி) திருத்தம் | 1000/- | 200/- |
| 43. | மிருசுவில் உப அலுவலகம் மதில் அமைத்தல் | 750/- | 150/- |
| 44. | எழுதுமட்டுவாள் பாடசாலை வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 45. | மிருசுவில் பொது நூலக மதில் அமைத்தல் | 1000/- | 200/- |
| | வரணி உப அலுவலகப் பிரிவு | | |
| 46. | வரணி சந்தை மலசலகூடம் அமைத்தல் | 1000/- | 200/- |
| 47. | வரணி உப பணிமனை திருத்தம் | 750/- | 150/- |
| 48. | வரணி பொதுநூலக முன்பக்க மதில் அமைத்தல் | 1000/- | 200/- |
| 49. | மந்துவில் பிரம்படி வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 50. | வரணி கறுக்காய் கந்தசாமி கோயில் கும்பிட்டான் பிள்ளையார் இணைப்பு வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 51. | வரணி இராசபெருந்தெரு வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 52. | வரணி குமரணி வயல்வெளி வீதி திருத்தம் | 1000/- | 200/- |

**அன்ரன் பொன்னையா**
தலைவர்
தவிசாளர்
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.
13-09-1999.

(சி/ 8886)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 07—01—1977

உதிர்வு 10—09—1999

### குணசிங்கம் ஞானேந்திரன்

எம் இனிய நண்பா குட்டிக் கண்ணா
உன் வாழ் நாளோ சில நாள்கள்
நீ கொண்ட அன்புக்கு எல்லையில்லை
உன் புன் சிரிப்பு என்றென்றும்
எம் நெஞ்சங்களில் நீங்கா நினைவாகத் தொடரும்
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மகா சில்க்ஸ், திருப்பதி ரெக்ஸ்,
அலங்கார் ரெக்ஸ்.

நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(68964)

---

## கண்ணீர் அஞ்சலி

### குணசிங்கம் ஞானேந்திரன்
(உரிமையாளர், கோபிகா ஆடையகம்)

அன்னாரின் திடீர் மறைவையிட்டு துயரத்தில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாரங்கா நகைமாடம்
177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

(சி/8905)

---

## கண்ணீர் அஞ்சலி

### குணசிங்கம் ஞானேந்திரன்
(குட்டிக் கண்ணன்)
(உரிமையாளர், கோபிகா ஆடையகம் யாழ்ப்பாணம்)

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயரத்தில் இருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**
73, கஸ்தூரியார் 'வீதி, யாழ்ப்பாணம்.

(68981)

---

## கண்ணீர் அஞ்சலி

### குணசிங்கம் ஞானேந்திரன்
(குட்டி, கண்ணன்)
(உரிமையாளர், கோபிகா ஆடையகம்)

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சாந்தி உணவகம்**
309, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(68969)

---

## நிரந்தர நியமனம் வழங்கப்படும்

வலி.தென்மேற்கு, செப்.13

கடந்த வருடம் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் மூன்று படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை நிரப்பி பட்டச்சான்றிதழின் நிழற்பிரதியுடன் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ - 185)

## மீனவருக்கு வீடுகள்

வலி. தென்மேற்கு, செப். 13

மீனவர் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சாவற்கட்டுப் பகுதியில் நூறு வீடுகள் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

50 ஆயிரம் ரூபா செலவில் மேற்படி வீடமைப்புத் திட்டத்திற்கான நடவடிக்கையினை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார்.

சாவற்கட்டுப் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 50 பயனாளிகள் கிராம அலுவலர் ஊடாகத் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

(ஐ—185)

## கற்கைநெறி

வலி. தென்மேற்கு செப்.13

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் பொது நிர்வாக கற்கைநெறிக்கு உயர்கல்வி பீடத்தினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஆங்கில மொழியில் நடத்தப்படும் மேற்படி கற்கை நெறி விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ—185)

## பேரவை உறுப்பினராக நியமனம்

யாழ்ப்பாணம், செப் 13

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி என். கனகரத்தினம் யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கும் போதனா வைத்தியசாலைக்கும் இடையிலான செயற்பாட்டு உறவினை வலுப்படுத்தும் முகமாக இந்த நியமனம் வழங்கப்பட்டிருப்பதாக அறிய வந்துள்ளது.

(ஐ—5)

## இளைஞனைக் காணவில்லை

யரழ்ப்பாணம், செப். 13

சந்நிதி ஆலய உற்சவ வேளை ஆலயத்துக்குச் சென்ற இளைஞன் ஒருவர் காணாமல் போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளையில் அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தியேட்டரடி, சங்கானையைச் சேர்ந்த சிவராசா பாக்கியராசா (வயது21) என்ற இளைஞனே காணாமற் போனவராவார்.

கடந்த மாதம் 24ஆம் திகதி தொண்டமனாறு செல்லச் சந்நிதி ஆலயத்துக்குச் சென்று வருவதாகக்கூறிவீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற இவர் இது வரை வீடுதிரும்பவில்லை என்றும்—

இவர் சித்தசுவாதீன மற்றவர் என்றும்—

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ—9)

---

## கண்ணீர் அஞ்சலி



### குணசிங்கம் ஞானேந்திரன்
(குட்டி — கண்ணன்)
உரிமையாளர் கோபிகா ஆடையகம்

அன்னை மடியில் 07 — 01 — 77

ஆண்டவன் அடியில் 10 — 09 — 99

எம் இனிய நண்பா
எமை விட்டு எமனிடம் செல்ல
உனக்கு எப்படி மனம் வந்தது?
எம் உடன் பிறவா சகோதரனே!
பாரினிலே எமைத் தவிக்கவிட்டு
எங்கு நீ பறந்து சென்றாய்?
எம் விழிகள் உனை எதிர்பார்த்து
துடிக்கின்றனவே
எம் உயிர்த் தோழனே நீ
எமை விட்டுச் சென்றாலும்
உன் நினைவுகள் எமை விட்டு நீங்காது!

பிரிவால் வாடும்:
உடன்பிறவாச்சகோதரர்கள்
ராகம்ஸ் பட்டுச்சோலை,
24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/8906)

---

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 07 — 01 — 1977



மறைவு 10 — 09 — 1999

### குணசிங்கம் ஞானேந்திரன்
(குட்டி - கண்ணன்)
(உரிமையாளர்: கோபிகா ஆடையகம்)

அன்னாரின் திடீர்மறைவையிட்டு துயரத்தில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்வதுடன்அவரின்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வினோ நகைப்பூங்கா,
சோபனா ஆடையகம்
குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம்.

(68992)

---

## கண்ணீர் அஞ்சலி

### குணசிங்கம் ஞானேந்திரன்
(குட்டி—கண்ணன்)
(உரிமையாளர், கோபிகா ஆடையகம்)

அன்னாரின் திடீர் மறைவையிட்டு துயரத்தில் இருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ராஜா ஸ்ரோர்ஸ்,
165, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தி. கண்ணன்,
சைக்கிள் கடை, நாவலர் றோட்.
யாழ்ப்பாணம்.

(68990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் வயோதிப மாது சோவியத்தின் உளவாளி!

## மிக நீண்ட காலத்தின் பின் உண்மை அம்பலம்

லண்டன், செப். 13

பிரிட்டனின் ஒதுக்குப் புற கிராமம் ஒன்றில் மிக நீண்ட காலமாக அமைதியாக வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் சோவியத் ரஷ்யாவின் முக்கிய உளவாளியாகச் செயற்பட்டார் என்ற உண்மை தற்போது அம்பலமாகி உள்ளது.

இவர் பிரிட்டனின் அணு ஆயுதத் திட்டம் தொடர்பான ரகசியங்களை 40 ஆண்டுகளுக்கும் கூடிய காலமாக மொஸ்கோவுக்கு அனுப்பி சோவியத் ஒன்றியம் அணு ஆயுத எதிர்ப்பு ஏற்பாடுகளைச் செய்ய உதவி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதும் கம்யூனிஸ்டுகளுக்கு மிக விசுவாசமாக இருக்கும் அந்த வயோதிபப் பெண் தொடர்ந்தும் தனது உளவுப் பணியைச் செய்ய விருப்பமுடன் இருப்பதாகக் கூறி இருக்கிறார்.

ரஷ்யாவில் வெளிநாட்டு உளவுத் தகவல்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த ஓர் இடத்தில் இருநது சில கோப்புக்களை ரகசியமாகக் கடத்தி வந்த முன்னாள் கே ஜி. பி. அலுவலர் ஒருவரே இப்பெண் தொடர்பான தகவல்களை அம்பலமாக்கினார்.

வயது காரணமாக இப்பெண் மீது நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை என பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது.

(ஐ)

### கிழக்குத்திமோர் நெருக்கடியை அடுத்து

# இந்தோனேசிய ஆட்சியை இராணுவம் கைப்பற்றுமா?

## தலைநகரில் பரவலாக வதந்திகள்

ஜகார்த்தா, செப். 13

கிழக்குத் திமோர் நெருக்கடியை அடுத்து இந்தோனேசியாவில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றக்கூடும் என்ற வதந்திகள் தலைநகர் உட்பட நாடு முழுவதும் அடிபட்டு வருகின்றன.

இராணுவப் புரட்சிக்குச் சாத்தியம் இல்லை எனினும் அதிபர் ஹபீபி தனது அதிகாரங்களை இழந்து வருவதாகவும் இராணுவம் அவரது கட்டுப்பாட்டில் இல்லை என்றவாறாகவும் இந்தோனேசியப் பத்திரிகைகள் சிலவற்றில் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

திமோர் நெருக்கடியில் இராணுவத்தளபதி ஜெனரல் விராண்டோவின் (WIRANTO) கை மேலோங்கி உள்ளது. சர்வதேச அழுத்தத்தின் கீழ் உள்ள அதிபர் ஹபீபி இது விடயத்தில் இராணுவத்துக்குக் கட்டுப்பட்டவராகக் காணப்படுகிறார் என்று சில பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

(ஐ)

# கிழக்குத் திமோர் நோக்கி பிரிட்டிஷ் போர்க் கப்பல்

ஜகார்த்தா, செப். 13

கிழக்குத் திமோரில் பணியில் ஈடுபட்டுள்ள ஐ. நா. பணியாளர்களுக்கு ஆதரவாக திமோரைச் சுற்றிய கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட போர்க்கப்பல் ஒன்றை பிரிட்டன் அனுப்ப முடிவுசெய்துள்ளது.

தென்சீனக்கடலில் தரித்து நிற்கின்ற ஏவுகணை பொருத்தப்பட்ட இந்தக் கப்பல் 280 பேருடன் இன்று கிழக்குத் திமோர் கடற்பகுதிக்குச் செல்லும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்குத் திமோரில் அதிகரித்து வரும் வன்செயல்களைத் தொடர்ந்து ஐ. நா. பணியாளர்களில் ஒரு பகுதியினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

ஏனைய பணியாளர்களின் வெளியேற்றத்தை 24 மணி நேரத்துக்கு ஐ. நா. ஒத்தி வைத்துள்ளது.

இதேவேளை —

கிழக்குத் திமோரின் நிலை பற்றி ஆராய ஐ. நா பாதுகாபபுச் சபையின் சிறப்புக் கூட்டம் நேற்றுக் கூட்டப்பட்டது.

[ஐ-க]

# மொஸ்கோ குண்டுவெடிப்பில் மொத்தம் 48 பேர் பலி

மொஸ்கோ, செப். 13

மொஸ்கோவில் கடந்த 8 ஆம் திகதி ஒன்பது மாடிக் கட்டடம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் பலியானோரின் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்துள்ளது.

எரிவாயு வெடிப்பின் காரணமாகவே இந்த விபத்து நடைபெற்றதாக முதலில் தெரிவிக்கப்பட்ட போதிலும் பாரிய குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளதாக ரஷ்யா பின்னர் ஏற்றுக் கொண்டது.

மொஸ்கோவின் சந்தைக் கட்டடம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்குப் பின் மூன்று குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளதாக ரஷ்ய சமஷ்டி பாதுகாப்புச் சேவை அறிவித்துள்ளது.

டாகெஸ்தான் கிளர்ச்சியாளர்களே கடைசியாக நடத்தப்பட்ட குண்டுவெடிப்பின் பின்னணியில் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

[ஐ-9]

# வாஜ்பாயை எதிர்த்துப் போட்டி

லக்னோ தொகுதியில் வாஜ்பாயை எதிர்த்து காங்ரஸ் கட்சியின் சார்பில் டாக்டர் கரண்சிங் போட்டியிடவுள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சரான கரண்சிங் தனது வேட்பு மனுவினை நாளை தாக்கல்செய்வார் எனக் காங்ரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

[ஐ-க]

# மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் குண்டு வைக்கச் சதித் திட்டம்?

## பொலீஸார் அங்கு தீவிர சோதனை

சென்னை, செப். 13

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயிலில் வெடிகுண்டு வைக்கச் சிலர் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து கடந்த வெள்ளியன்று பொலீஸாரும், வெடிகுண்டு அகற்றும் நிபுணர்களும் ஆலயத்தில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர்.

ஆலயத்துக்கு வந்திருந்த பல நூற்றுக் கணக்கான பக்தர்கள் அனைவரும் தெறகு வாயிலில் வைத்துப் பொலீஸாரால் பரிசோதனை செய்யப்பட்டனர். எனினும் குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆலயத்துக்குள் குண்டு வைக்கசிலர் திட்டமிட்டதாகப் பள்ளி மாணவன் ஒருவன் கொடுத்த தகவலை அடுத்தே பொலீஸார் இந்தத் தேடுதலை மேற்கொண்டனர். எனினும் குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

மதுரை வசந்தகத்தைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவன் கூடல் ஊரில் உள்ள தனது உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் வழியில் சிலர் கூடிஇருந்து மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் குண்டு வைப்பது குறித்துப் பேசிக்கொண்டிருந்ததாகவும் —

பிரஸ்தாப மாணவன் தாம் பேசியதைக் கேட்டுவிட்டதை அறிந்த அக்கும்பல் அம்மாணவனைக் கடத்திச்சென்று வீடு ஒன்றில் மறைத்து வைத்திருந்ததாகவும்

அங்கிருந்து ஒருவாறு தப்பிவந்த மாணவன் வழியில் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததாகவும் —

தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# சிறையில் அன்வருக்கு நஞ்சூட்டப்பட்டதா?

கோலாலம்பூர், செப். 13

மலேசியாவின் முன்னாள் பிரதிப பிரதமரான அன்வர் இப்ராஹிமுக்குச் சிறையில் வைத்துநஞ்சூட்டப்பட்டதாக அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக அவர் மீதான விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

அன்வரின் சிறுநீரை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிப் பரீட்சித்த போது அதில் நச்சுத் தன்மை காணப்பட்டதாகவும் அந்த அறிக்கை தன்னிடம் இருப்பதாகவும் அந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

வழக்கை ஒத்திவைத்த நீதிபதி அன்வரை வைத்திய சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

(ஐ-9)

# ஐ. நா. மாநாட்டில் ஷெரீப் கலந்து கொள்ளார்

வியன்னாவில் இம்மாத இறுதியில் நடைபெறும் ஐ நா சபையின் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களில் பல நாடுகள் கையெழுத்திட இருப்பது குறிப்பிடத்தக்கது.

அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில கையெழுத்திடப் போவதில்லை எனவே தான் மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என ஷெரீப் கூறியுள்ளார்.

அணு ஆயுதத்தடை ஒப்பந்தமான சி.டி.பி. டியை ஏற்பதாக முன்பு ஷெரீப் கூறியிருந்தமை தெரிந்ததே

# 40 பேர் பலி

பிரிஸ்டினா, செப் 13

கொசோவோவில் பிரிஸ்டினா மீதான நேட்டோ தாக்குதல் முடிவுற்ற பின்னர் அங்கு இடம்பெற்ற குண்டு வெடிப்பிலும் கண்ணிவெடியிலும் சிக்கி இதுவரை 40 பேர் பலியாகியுள்ளனர்.

நேட்டோ தாக்குதலில் பாவிக்கப்பட்ட குண்டுகள் காலந்தாழ்த்தி வெடித்ததனாலேயே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (ஐ-7)

# இலங்கையில் திருமலை சமாதான நகராகத் தெரிவு

## 'யுனெஸ்கோ' அறிவிப்பு

இலங்கையின் சமாதான நகராக திருகோணமலை நகரை முன்மொழிந்திருப்பதாக யுனெஸ்கோ [ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாசாரஸ்தாபனம்] அமைப்பின் பிரதிநிதி பேராசிரியர் மோகியாதி தெரிவித்துள்ளார்.

வடக்கு — கிழக்கு மாகாண தலைமைச் செயலர் ஜி கிருஸ்ணமூர்த்திக்கு சில தினங்களுக்கு முன் அனுப்பி வைத்த 'பக்ஸ்' செய்தியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் செறிந்து வாழும் திருகோணமலை நகரை சமாதானத்துக்கான நகராக முன்மொழிந்திருப்பதாகவும், இந் நகரில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில கலை, கலாசார விளையாட்டு நிகழ்வுகள், சமாதான யாத்திரைகள், பொதுமக்கள் பங்கு பற்றும் கொண்டாட்டங்கள் போன்றவற்றை அரசு மற்றும் அரச சார்பற்ற வர்த்தக சமூகங்களின்துணையுடன் மேற்கொள்ளலாம் என்றும் —

இலங்கை நீண்டகாலமாக யுத்தத்தினால் சீரழிந்து வந்துள்ளது. எனவே இலங்கைக்கும் சர்வதேச சமாதான ஆண்டுப் பிரகடனம் பொருந்தும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி சமாதானத்துக்கான அங்குரார்ப்பண திகதி என்றும்தெரிவித்தார்.

ஜப்பானின் ஹிரோஷிமா நகர், கீனப் பெருஞ்சுவர், வியட்நாமின் ஹநோய்நகர், ரஷ்யாவில்மொஸ்கோ, பிரான்சில ஈபில் கோபுரம், சௌகலில் போலிதீவு, எகிப்தில் கிஸாபிரமிட்டுகள் என்பன சமாதானத்துக்கான நகர்களாக ஏற்கனவே பிரகடனப் படுத்கப்பட்டது அறிந்ததே.

எதிர்வரும் இரண்டாயிரமாண்டை சர்வதேச சமாதான ஆண்டாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.


## கண்ணீர் அஞ்சலி

### குணசிங்கம் ஞானேந்திரன்

(உரிமையாளர் யாழ். கோபிகா ஆடையகம்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நண்பர்கள்

பாஷையூர், யாழ்ப்பாணம்.

(69000)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்

திரு. சூ நீக்கிலாப்பிள்ளை

அவர்களின் அன்புத் தாயார்

### சூசைப்பிள்ளை எலிசபெத்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபை, பணியாளர்கள்,
யாழ். ப. நோ கூ. சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
யாழ். பட்டணக்கிளை.

[68999]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் நாய்கள் விற்பனைக்கு உண்டு. ஆண் வயது 1½, பெண் வயது 1. தொடர்பு: ந. ராகுலன் [நிக்ஷன்] உதயசூரியன் வீதி, உடுவில் கிழக்கு. சுன்னாகம். [68972]

நல்ல நிலையிலுள்ள குளிர் சாதனப்பெட்டிகள் [Sisil 60, Double Door] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தம்பா 103, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (68976)

## கலர் மீன்

Gold Fish உட்பட பல இன கலர் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. அரசரட்ணம் 215, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (O L.R) தேவாலயத்துக்கு அருகில். தினசரி 4.30 மணிக்குப்பின் பார்வையிடலாம். (68961)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கே. அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயில் வடக்கு வீதி, T.P. NO. 070 — 212354 070 — 212383. (68726)

## தவறிவிட்டது

இளையதம்பி விஜய ஜெயராசா என்பவரின் தேசிய, விசேட அடையாள அட்டைகள் (71338170 V, 0907004531) நல்லூரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தினேஷ்பேக்கறி, மானிப்பாய் என்றமுகவரியில் ஒப்படைத்து உதவவும். [68942]

பொ. இராசரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 331101141V, விசேட அடையாள அட்டை [0905002139] என்பன 11-09-99 முன்னிரவு நல்லூர் துர்க்கை அம்மன் கல்யாண மண்டபத்திற்கும் அரசடி வீதிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அவற்றை யாழ். இந்துக் கல்லூரி அலுவலகம் அல்லது சிவதொண்டன் நிலையம் அல்லது பொ. இராசரத்தினம், சுதுமலை தெற்கு, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (சி/8909)

## கண்டெடுக்கப்பட்டது

நல்லூர் 63வர் குருபூசை மண்டபத்திற்கு அருகில் சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவரால் கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அடையாளத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: இ. சங்கர், பாரதி பதிப்பகம், இல. 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல- 3081. [சி/8881]

# மிதிவெடியில் மாடு சிக்கியது

சண்டிலிப்பாய், செப்,13

மாதகல் மேற்கு கத்தி வெட்டுவான்என்ற இடத்தில் மண் அணைக்குச் சமீபமாக மிதிவெடியொன்றில் சிக்கி இப்பகுதியில் மேய்ச்சலுக்கு வந்த பசுமாடு ஒன்று படுகாயமடைந்துள்ளது.

இந்தப் பகுதியில் மேலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தினால் படுகாயமடைந்து கடந்த மூன்று தினங்களாக அந்த இடத்திலேயே கிடக்கும் மாட்டைக் காப்பாற்ற எவரும் முன்வரவில்லைஎன்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-135)

உ

ஈவினை மத்தி

## ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் திருக்கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1999

கொடியேற்றம்: (15–09–99) புதன் காலை 10 மணி
தொடர்ந்து 11 நாள்கள் விழா நடைபெறும்.
தேர் உற்சவம்: (24-09-99) வெள்ளி காலை 10 மணி
மஹோற்சவகுரு: தியாக கெங்காதரக் குருக்கள்

கற்பக விநாயகர் பரிபாலன சபையினர்
ஈவினை மத்தி.

(68951)

மானிப்பாய் பல நோ: கூட்டுறவுச் சங்கம்

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் உள்ள 7,400 வெற்றுச் சாக்குகளையும், 15,250 வெற்றுப் பைகளையும் விற்பனை செய்வதற்கான கூறுவிலைகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். மீளளிப்பு வைப்பாக ரூபா 500 சங்கத்தில் செலுத்தி இதற்கான பத்திரத்தைப் பெற்று கூறுவிலைகளைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு, சங்கத்தில் இதற்கென உள்ள பெட்டியில் 25.09.99-க்கு முன்னர் சேர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்
மானிப்பாய் கோ. ப. ப. நோ. கூ. சங்கம்

(சி/8893)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி லோகநாயகி தயாபரன்

மண்ணில் 14 – 10 –1949 விண்ணில் 26 – 08 – 1998

ஆண்டுகள் தேயலாம்
உங்கள் நினைவோ எம்மிடமிருந்து தேய்வதில்லை!
உங்கள் ஆத்மா இறையடி இணைய
இறைவனை இறைஞ்சும்...

கணவர், பிள்ளைகள்.

12/ 4, வைமன் வீதி,
நல்லூர்.

(68988)

# விசர் நாயின் கிருமி புண்களூடாக பரவியதால் இளம் தாய் மரணம்

யாழ்ப்பாணம், செப். 13

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் விசர் நாய்க்கடி நோயினால் மரணமாகியுள்ளார்.

அளவெட்டி கிழக்கு கும்பனையைச் சேர்ந்த திருமதி ஜெகநாதன் சதீஸ்கலா [வயது 31] என்ற இரு பிள்ளைகளின் தாயே மரணமானவராவார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இவரது வளர்ப்பு நாய்க்குட்டி விசர் நாயினால் கடியுண்டு இறந்ததாகவும் —

அக் குட்டியின் இறந்த உடலை கைகளால் தொட்ட சமயம் அவரது கைகளில் இருந்த புண்கள் ஊடாக நோய்க் கிருமி பரவியதில் இவருக்கு விசர்நோய் தொற்றி மரணம் சம்பவித்துள்ளதாகவும் —

யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விசர் நோய்க்கிருமிகள் புண்கள் மற்றும் காயங்கள் ஊடாக இலகுவில் பரவி நீண்ட காலத்துக்குப் பின் விசர் நோயை ஏற்படுத்தக் கூடியவை என்பதால் வளர்ப்பு நாய்கள், பூனைகள் விடயத்தில் அவதானமாக கடந்துகொள்ளுமாறு மருத்துவ வட்டாரங்கள் பொது மக்களை எச்சரித்துள்ளன. [ஐ-15]

# சுகாதாரப் பரிசோதகர்களுக்கு புதனன்று நியமனக் கடிதம்

திருநெல்வேலி, செப். 13

யாழ்.மாவட்டத்தில் பொது சுகாதாரப்பரிசோதகர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனங்கள் நாளை மறுதினம் புதன் கிழமை யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் அவரது பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன. இவர்கள் தமது இறுதிப் பரீட்சையில் பெற்ற திறமையின் (புள்ளிகளின்) அடிப்படையில் யாழ். மாவட்டத்திலுள்ள வெற்றிடங்களுக்கு நியமனம் செய்யப்படுவார்கள் என்றும்—

எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு பணிமனைக்கு தவறாது சமுகம் தந்து நியமனங்களை நேரில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் —

பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம் தெரிவித்துள்ளார். (ஐ-135)

# சட்டவிரோதமாக மின்பெற்ற இளைஞர் படையினரால் கைது

நெல்லியடி, செப். 13

பட்டப்பகல் வேளை சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற இளைஞர் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார் மின் வயர்களும் மீட்கப்பட்டன.

கடந்த வியாழனன்று இச்சம்பவம் கரணவாய் மத்தியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே குஞ்சர் கடை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

நெல்லியடி பொலீஸார், குறித்த சந்தேக நபரை மறுநாள் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம் வதிரி பரமானந்தா ஆச்சிரமத்திற்கு 250 ரூபா தர்மப்பணமாகச் செலுத்து மாறு நீதிவான் இ. த. விக்னராஜா அவருக்கு உத்தரவிட்டார். (ஐ-109)

# வெளி இணைப்பு இயந்திரம் பாவிக்க அனுமதிக்க கோரிக்கை

## குருநகர் மீனவர் சங்கம் மகஜர்

குருநகர், செப். 13

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னாரில் உள்ள மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள எச்.பி. 8 வெளி இணைப்பு இயந்திரம் மற்றும் கல்நார் படகு மூலம் யாழ்ப்பாணத்திலும் மீன் பிடிக்க அனுமதி பெற்றுத் தருமாறு கோரும் மகஜர் ஒன்றைக் குருநகர் கடற்றொழில் அபிவிருததிச் சங்கம் யாழ். அரச அதிபரிடம் கடந்த வாரம் சமர்ப்பித்துள்ளது.

1995 இல் இடப் பெயர்வுக்கு முன் துப்பாக்கிச் சூட்டிற்கு மதகியிலும் சுதந்திரமாக தொழில் செய்தவேளை உயர்ந்திருந்த விலைவாசியை சமாளிக்கும் வகையில் கடற்றொழில்நிவாரணம், தொழில் செய்வதற்கான வசதி என்பன எமது கடற்றொழில் மக்களைக் காப்பாற்றியது.

1996 இல் மீளக் குடியேறிய பின் எமது மக்கள் ஒரு சிறைச் சாலைக்குள் தொழில் செய்வது போல் குறுகிய தூர தொழில் அனுமதிக்கு மத்தியிலும ஒரு வேளை உணவை உண்ண நிவாரணம் உதவி அளித்தது. தற்போது நிவாரண நிறுத்தத்தை அடுத்து எமது மக்கள் வறுமையில் வாடி பட்டினிச்சாவை எதிர்நோக்கி அன்றாடம் ஜீவனோபாயத்தை நடத்த முடியாமல் உள்ளனர். 1992 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கி வருவது போன்று கடற்றொழில் நிவாரணத்தை வழங்குமாறும் கோருகிறோம் என்றும் அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-51)

# சித்திரப் போட்டி

'யுனிசெவ்' நிறுவனத்தினால் நடத்தப்படும் சித்திரப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இச் சித்திரப் போட்டி தொடர்பாக யாழ். வலயப் பாடசாலை சித்திர ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் யாழ்.இந்துக் கல்லூரியில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறும். (ஐ-69)

# அறிவித்தல்

## பருத்தித்துறை பிரதேச சபை

### ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி வருடாந்த மஹோற்சவம்-1999

மேற்படி மஹோற்சவ காலத்தில் வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சுற்றாடலில் வியாபார நிலையங்கள் அமைத்தல், வாகனங்களில் கொண்டு சென்று வியாபாரம் செய்தல், சாதாரண வியாபாரம் ஆகியவற்றை மேற்கொள்வோர் ஆலய நிர்வாகத்தின் நிலத்திற்கான அனுமதியைப் பெற்று எமது பிரதேச சபையில் உரிய தற்காலிக வியாபார உரிமத்தைப் பெற்ற பின்னரே வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே.பி.யு.எம்.
தவிசாளர்
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.
07—09—99

(சி/8911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மீண்டும் நிவாரணம்

குடாநாட்டில் வாழும் மக்களில் 88,000 குடும்பங்களுக்கு மீண்டும் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் கொடுப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது, இதற்கான அனுமதியை அரசாங்கம் கடந்த வாரம் வழங்கியது.

இடம்பெயர்ந்து சென்று மீளக்குடியமர்ந்த போதிலும் தொழில் ஒன்றைச் செய்து வருமானத்தைப்பெற முடியாதவர்களுக்கென்றே இந்த நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அவர்களுக்கு வருமானம் கிடைப்பதற்கு தொழில் வசதி எதுவும் செய்யாமலே, அரசு நிவாரணத்தை நிறுத்தியது. இதனால் சம்பந்தப்பட்ட மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டார்கள்,

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி கொடுத்த அழுத்தத்தினால் அரசாங்கம் தனது முந்திய முடிவை மாற்றிஇருக்கிறது.

குடாநாட்டு மக்கள் மீளக் குடியமர்ந்து மூன்றரை வருடங்கள் ஆகின்றன ஆனால் அவர்கள் தமது ஜீவனோபாயத்தை சொந்தத்தில் தேடிக் கொள்வதற்கு வசதி செய்யப்படவில்லை. அதற்கான பெரிய அளவிலான திட்டம் எதுவும் நடைமுறைப் படுத்தப்படவுமில்லை.

அதனாலேயே அவர்கள் தொடர்ந்தும் நிவாரணத்தை எதிர்பார்க்கவேண்டிய — அதிலேயே தங்கியிருக்க வேண்டிய — நம்பியிருக்க வேண்டிய — நிலையில் உள்ளனர். தனது நிவாரணத்தில் மக்கள் தங்கியிருக்கும் நிலையை நீக்குவது அரசாங்கத்தின் பொறுப்பு அதன் புனர்வாழ்வுப் பணிகளில் இடம்பெயர்ந்து குடியமர்ந்தோருக்கு தொழில் வாய்ப்பை உண்டாக்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருப்பின் உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துவது, மீண்டும் வழங்குவது என்ற நிலையைத் தவிர்க்கலாம்.

இடம்பெயர்ந்துபின்னர் மீளக் குடியமரும் மக்களுக்கு குறிப்பிட்ட மாதங்களுக்க நிவாரணம்— உலர் உணவு நிவாரணம் வழங்கலாம் என்பது அரசாங்கத்தின் விதி. மீளக் குடியமர்ந்தவர்களுக்கு தொழில் வாய்ப்பு உண்டாக்கிக் கொடுப்பதில் அரசு அக்கறை காட்டாமல், திட்டமிட்டுச் செயலாற்றாமல், நிவாரணம் வழங்குவதற்கு கால அட்டவணை வதிப்பது மக்கள் நலன்நாடிய செயலல்ல.

இதேவேளை—

குடாநாட்டு மக்களைப் பொறுத்த வரையில் அவர்களைத் தனது நிவாரணத்தில் தங்கி இருக்கச் செய்து, சொந்தக் காலில்நிற்கவிடாமல் செய்வதற்கு அரசு உள்ளூரவிரும்புகிறதோ என்று சந்தேகப்பட வேண்டியும் உள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்காது, நிவாரணத்தை நிறுத்துவதும் வெட்டுவதும் பின்னர் வழங்குவதுமாக அரசாங்கம் ''மெரி-கோ - ரவுண்ட்'' டில் சுற்றுவதை அரசியல் லாபம் நாடிய ஒருவகை உத்தியாகவும் கருதலாம்.

மீளக்குடியமர்ந்த மக்கள் அரசாங்கத்தின் நிவாரணத்துக்குக் கையேந்திக் கொண்டிருக்கும் நிலையைத் தொடரவிடாது அவர்கள் தமதுசொந்தக்காலில் நிற்க வகைசெய்யும் திட்டங்களை அமுல் செய்வது மிகவும் அவசியம். அது வரைக்கும் நிவாரணத்தை அரசியல் லாபம் தேடும் காயாக நகர்த்துவது நிறுத்தப்பட வேண்டும்.

போருக்குக் கோடிக்கணக்காகச் செலவிடும் அரசு, குடாநாட்டில் மீளக்குடியமர்ந்தவர்களுக்குத் தொழில் வாய்ப்பை உண்டாக்குவதற்குப் பணம் செலவிடுவதில் தயக்கம் ஏன்?

# மருத்துவப் பயிற்சியிலும் தொழிலிலும் துரித முன்னேற்றங்கள் அடையப்படுவதால் நன்மை

— 2 —

மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் பயிற்றப்படும் போது 3 ஆம் வருடத்தில் இருந்து மருத்துவப் பயிற்சி ஆரம்பிக்கப்படுகிறது. முன்பு கூறியது போல, ஆரம்பகாலத்தில் இருந்து சிறிதுசிறிதாக தற்போது இது பயிற்றுவிக்கப்படுகிறது. ஒரு நோயாளியுடன் எப்படித் தொடர்பு வைத்திருப்பது. நோயாளியுடன் இருக்கும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் ஆகியன பயிற்சியின்போது வலியுறுத்தப்படுகின்றன. இது ஒருபுனிதமான தொழில் ஆனபடியினால் சத்தியம், (உண்மை), தர்மம் (சேவை), சாந்தி (அமைதி), பிரேமை(அன்பு), பொறுமை, கருணை, உரிய நேரத்தில் கடமை செய்தல், நேர்மை, கட்டுப்பாடு ஆகியன முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. கடமை நேரத்தில் மது அருந்துதல் முற்றாகத்தடைசெய்யப்பட்டுளது.

மருத்துவத் துறையின் தந்தையான கிரேக்க நாட்டைச் சேர்ந்த கிப்போக்கிறற் என்பவரால் உருவாக்கப்பட்ட சத்தியப்பிரமாணத்தில், மருத்துவர் ஒருவர் தான் அறிந்த இந்தக் கலையை வேறு ஒருவர் அறியவிரும்பின், தானே வலிய முன்வந்து இதனை அவருக்குக் கற்பிக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரியில் இருந்து வெளியேறிய பின்னரும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் காலமும் தரமும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. பிரித்தானிய அமைப்பை கடைப்பிடிக்கும் நாடுகளில், பொது மருத்துவத்துறை, சத்திரசிகிச்சை, மகப்பேறு, பெண்நோயியல், குழந்தை வைத்தியம்போன்ற பிரிவுகளில் ஏதாவது இரண்டு பிரிவில் ஒவ்வொன்றிலும் ஆறு மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்துடன் ஒருவர் தொடர்ந்து பொது மருத்துவத் துறையிலும் குழந்தை வைத்தியத் துறையிலும் பயிற்றப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. பயிற்சியின் பின்னர் மருத்துவத் தொழிலைச்செய்ய அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகிறது.

இந்தியாவில் படிப்பின் பின்னரான பயிற்சி மொத்தமாக இருவருடங்கள் நடைபெறுகிறது. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவுகளிலும் ஆறு மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்துடன் சமுதாய மருத்துவத்துறையும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இதனால் பயிற்சி முடியும் போது ஒருவர் பூரண வைத்தியராக வாழ்நாள் முழுவதும் கடமையாற்ற முடியும் எனக்கூறப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் கல்லூரியை விட்டு வெளியேறிய பின் ஒருவர் எத்துறையை விரும்புகிறாரோ அத்துறையில் முழுவிவரமான 3தொடக்கம் 5 வருட பயிற்சி அளிக்கப்படுகிறது.

மருத்துவம் ஒரு குழு வேலை என்பதால் தாதிமார்கள், மருத்துவ கதிரியக்க தொழில் நுட்பவியலாளர்கள், மருந்தாளர்கள், இயன் மருத்துவத் துறையினர், பலதரப்பட்ட சமூகசேவையாளர்கள், சட்ட வைத்திய வல்லுனர்கள், பரிசாரகர்கள் ஆகியோரது ஒத்துழைப்பு இத்தொழிலுக்கு அவசியமாகிறது. மிகவும் அதிகமானவர்கள், தமது பிற்காலத்தில் வைத்திய சிகிச்சை அளிப்பதையே பெரிதும் விரும்புகிறார்கள். ஒரு பகுதியினர் மருத்துவத் தடுப்பு பகுதிகளிற்குள் அல்லதுபல்கலைக் கழகத்தில் உள்ள மருத்துவ பீடங்களுக்குள் நுழைகிறார்கள். சிறிய எண்ணிக்கையினர் நிர்வாகப்பகுதிக்கும் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினர் தனி ஆராய்ச்சியிலும் ஈடுபடுகிறார்கள்.

நோயாளிகளின் பிரச்சினை அதன் முக்கியத்துவத்துக்கேற்ப ஆராயப்பட்டு தீர்க்கப்படுவது, தற்காலத்தில் பிரசித்தம் அடைந்து வருகிறது. நோயாளிகளின் பதிவேடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் அந்தரங்கமாக வைக்கப்படுகின்றன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தொடர்பு சாதனவசதிகள் பற்றாக்குறையினால் பதிவேடுகள், அந்தரங்கமாக வைக்கப்படுவது சாத்தியமற்று இருக்கின்றது.

ஒரு நோயாளியை முதன் முதலாக மிகவும் பூரணமாக,


வைத்திய கலாநிதி க. சிவநேசன்
M.B.B.S (SL) M.D. (U.S.A),
(பொது மருத்துவத்துறை மருத்துவரும் விரிவுரையாளரும்)


கவனமாக, நுண்ணியதாகப் பார்க்கவேண்டுமெனின் ஏறக்குறைய 45 நிமிடங்கள் தேவைப்படும். பின்பு அந் நோயாளி முன்பு பார்த்த நோய்க்குச் சிகிச்சைபெற வரும் போது 10 தொடக்கம் 20 நிமிடங்கள் போதுமானதாகவுள்ளன. ஆனால் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் வைத்தியர்களின் குறைபாட்டினால் இது நடைமுறைச் சாத்தியமற்றதாகிறது.

### மருத்துவருக்குக் கட்டாய சேவை

பிரபல்யமான நகரங்களில் தமது பிற்காலப்படிப்புக்களை மேற்கொள்ளப் பல வசதிகள் இருப்பதைக் கருத்திற்கொண்டு வைத்தியர்கள் அந்த இடங்களுக்குச் செல்கிறார்கள். அத்துடன் வசதியான வாழ்க்கை, பிள்ளைகளின் நல்ல எதிர்காலம், நல்ல வருவாய், உயர்தர சிகிச்சை முறைகள், போர்க்கால சூழ்நிலைகளில் எதிர்நோக்கும் கஷ்டங்கள்போன்றவை இவர்கள் இடம்பெயர வேறு காரணங்கள் ஆகின்றன. அதே நேரத்தில் தியாக, அர்ப்பண மனப்பான்மையுள்ளவர்கள், தமது பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள் மத்தியில் இருந்து நாட்டுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் தமது சொந்த இடங்களில் வேலை செய்கிறார்கள்.

மருத்துவக் கல்வி அனேகமான இடங்களில் மக்களின் வரிப் பணத்திலும் அரசாங்கம் செலவு செய்யும் பணத்திலும் இலவசமாக அளிக்கப்படுவதனால் சொந்த இடங்களில் சில வருடங்கள் கட்டாய சேவை செய்ய வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஆனால் இதற்கு எதிரானவர்கள் இது தனிமனித சுதந்திரத்தைப் பாதிக்கும் செயலெனக் கூறுகிறார்கள்.

மருத்துவப் பயிற்சி அளிக்கப்படும் வைத்தியசாலைகளும் அவற்றின் தரத்திற்கேற்ப மாறுபடுகின்றன. உலகெங்கும் தற்போது பெண்கள் ஆண்களைவிட அதிகமாக மருத்துவத் துறையில் ஈடுபடுகிறார்கள். தொடர்ச்சியாக ஒரு வைத்தியர் வேலை செய்தால் அது அவரின் மனநிலையைப் பாதிக்கும் என்பதால் அமெரிக்காவில் ஆகக்கூடியது 36 மணித்தியாலங்கள் மட்டுமே ஒரு வைத்தியர் தொடர்ந்து வேலை செய்யலாமெனச் சில மாநிலங்களில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கு ஒவ்வொரு 10 வருடங்களுக்கு ஒரு முறை உயர் தரத்தைப் பேண மீள் மதிப்பீட்டுக்கு Re- certification) வைத்தியர்கள் உட்படுத்தப்படுவது சமீபகாலத்தில் நடைமுறைக்கு வந்துள்ளது.

மருத்துவக்கல்வி, பயிற்சி தொழில் ஆகியன அந்தந்த நாட்டின்மருத்துவப் பேரவையினால் Medical Council) மேற்பார்வை செய்யப்படுகின்றன. இப்பேரவை மருத்துவ பீடங்களுடனும் உயர் கல்வி சுகாதார அமைச்சுக்களுடனும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடனும், மருத்துவ சங்கங்களுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறது.

### மருத்துவத் தொழில்

மருத்துவத் தொழில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பல சாதனைகளைப் புரிந்துள்ளது. உலகெங்கும் போசாக்குக் குறைவு முன்னர் போல் அல்லாமல்; குறைந்தளவாகவே தற்போது காணப்படுகிறது. இருபதுகளில் பெரியம்மை கோடிக்கணக்கான உயிர்களைப் பாதித்தது. எனினும் பெரியம்மை (Samll Pox) தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு, இன்று பெரியம்மை உலக மக்கள் மத்தியிலிருந்து மிகப் பெரிய அளவில் அகற்றப்பட்டு விட்டது. அமெரிக்காவில் உள்ள ஆய்வுகூடங்களில் மட்டுமே இந்த வைரசுக்கள் உள்ளன சமுதாய மருத்துவத்துறைக்கு இது ஒரு மகத்தான சாதனை யாகும்.

இதே போன்று போலியோ நோயையும் உலகில் இருந்து அகற்றி விடலாமெனத் தற்போது எண்ணப்படுகிறது. முப்பதுகளில் மலேரியா உலகெங்கும் (எமது நாடு உட்பட) பல உயிர்களைப் பலியெடுத்தது. அக்காலத்தில் சிங்கோனா மட்டும் மலேரியா மருந்தாக இருந்தது. நுளம்பைக் கட்டுப்படுத்தி மற்றைய மலேரியா மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் மீண்டும் தற்போது, குறிப்பாக யுத்த பூமிகளில், தேடுவாரற்ற காணிகளில் உள்ள புதர்களில் நுளம்பு பெருகுவதால் மீண்டும் இது ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அத்துடன் குறிப்பாக ஆபிரிக்காவில் மலேரியாக் கிருமிகள் பல தரப்பட்ட மருந்துகளுக்கு தாக்குப் பிடிக்கக்கூடிய எதிர்ப்புச் சக்தியை (Multi Drug Resistenance) பெற்றதனால் இதுஒருபெரிய பிரச்சினையாக தற்போது அங்கு உருவெடுத்துள்ளது. முப்பதுகளில் மேகநோயும், (Syphylis) நாற்பதுகளில்

> உதயன் 09-09-1999 இதழில் வெளியான மருத்துவம்: கல்வி, பயிற்சி, தொழில் — என்ற கட்டுரைத் தொடரின் இரண்டாவது பகுதி இது.

பிளேக் நோயும் (Plaque( ஐம்பதுகளில் சளிச்சுரமும் (Pneumonia) அறுபதுகளில் காசநோயும் (Tuberculosis) மனித குலத்தைப் பெரிதும் பாதித்தன. அலெக்சாண்டர் பிளெமிங் கின் பென்சிலின் மருந்தும், அதிகசக்திவாய்ந்த காசநோய் நுண்ணுயிர்க் கொல்லிகளும் பாவனைக்கு வந்தவுடன் அவை கட்டுப்படுத்தப்பட்டன. மேலும் கிரமமாக; நோய்த்தடுப்பு ஊசிகளும், ஏற்புவலி, போலியோ, தொண்டைக் கரப்பான் (Whooping Cough) ஆகியவற்றையும் தடுக்க முக்கூட்டு தடுப்பு ஊசியும் (Triple Vaccine), காசநோய்த் தடுப்பூசியும் (B,C.G.), மற்றும் சின்னமுத்து, கூவைக் கட்டு, றூபெல்லாபோன்றவற்றைக் கட்டுப்படுத்த M. M R. தடுப்பூசியும், ஜேர்மன் சின்ன முத்து தடுப்பு மருந்தும் இந் நோய்களை மிகப்பெரிய அளவில் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன. அத்துடன் பல கொடியநோய்களுக்கும்உதாரணமாக மஞ்சள் காய்ச்சல், விசர்நாய்க்கடி, மஞ்சள் காமாளை – B போன்றவைகளுக்கும்) இப்போது தடுப்பு மருந்துள்ளது.

மருத்துவ விஞ்ஞானம் இப்படிக் காலத்துக்குக் காலம் நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் போது, கலங்களில் நிறமூர்த்தங்களில் ஏற்படும் மாற்றங்களினால் (Mutation' Transduction Transformation), புதுப்புது நுண்ணுயிர்க் கிருமிகள் உண்டாகி மனித வர்க்கத்தைத் தாக்குகின்றன. எண்பதுகளில் முழு உலகத்தையே ஆட்டிப் படைத்து பயங்கரப் பரிமாணத்தில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது எயிட்ஸ் பல கோடிக்கணக்கான டொலர்களில் ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதிலும் இதற்கு ஒரு தடுப்பு மருந்தையோ, முற்றாக மாற்றும் ஒரு மருந்தையோ மருத்துவ உலகம் இன்னும் அறிமுகம் செய்யவில்லை. வைரசுக்களில் பலதரப்பட்ட நிலைகள் வெவ்வேறு எதிர்ப்புச் சக்தியை (Differant Antigeneciy) கொண்டுள்ளதால் தடுப்பு மருந்தை உருவாக்குவது இலகுவான காரியமாக அமையவில்லை.

மலேரியா தடுப்பு மருந்து உருவாக்க இயலாமல் இருப்பதற்கும் இதுவே காரணமாகக் கூறப்படுகிறது.

கடைசிக் காலாண்டில் பலதரப்பட்ட மருத்துவத் தொழில் நுட்பவியலில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சுவாசத் தொகுதியில் காற்றோட்ட குழாய்களைப் பற்றி அறிய—Bronchogramme. Bronchocope Lung function test V. Q Scan. சுற்றோட்டத் தொகுதியில் இருதய அறைகளைப் பற்றி அறிய — Echocardiogramme, இருதயத் துடிப்பின் ஒழுங்கீனங்களை அறிய—Holter Moniter. Electro Physiological/studies இருதயத்தின் இரத்த ஓட்டத்தை அறிய — Catheteraisation, செயற்கைச் சுவாசத்திற்கு - Respirator என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

ஆவணி 28
செவ்வாய்க்கிழமை
திதி: சதுர்த்தி
காலை 6.07 வரை
நட்சத்திரம்: சுவாதி
பிற்பகல் 4 54 வரை.
ரிஷி பஞ்சமி, சுபநாள்
சுபநேரம்: 10.33—12.03
ராகுகாலம்: 3.03—4.33
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பல்வேறு போராட்டம் உழைப்பு ஆகியவற்றிற்கிடையிலும் ஒருவன் உண்மையே பேசவேண்டும்.
— இந்துமதம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து வசதியின்மையாலேயே இங்கு பணிபுரிய தெற்கு டாக்டர்கள் பின்னடிப்பு

## சுகாதார அமைச்சின் பணிப்பாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், செப். 13 போக்குவரத்துப்பிரச்சினை காரணமாகவே யாழ். போதனா வைத்தியசாலையில் கடைமையாற்றுவதற்கு வைத்திய நிபுணர்கள் எவரும் முன் வருகிறார்கள் இல்லை, சுகாதார அமைச்சின் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் என். ஜெகநாதன் இத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள வைத்திய நிபுணர்களின் வெற்றிடங்களைநிரப்ப முடியாதாஎன்று அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் எமது செய்தியாளருடன் உரையாடியபோது தெரிவித்ததாவது:

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுமாறு வைத்திய நிபுணர் ஒருவருக்கு அமைச்சு பணிப்புரை விடுத்தபோது. அதற்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றினை அந்த வைத்திய நிபுணர் தாக்கல் செய்துள்ளார்.

யாழ். வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்களின் போக்குவரத்துப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு ஒரு வருடத்தில் மூன்று விமானப் பயணங்களுக்கான இலவச விமான டிக்கெட் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சரவைக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி புதிய கட்டடங்களுக்கோ மற்றும் புதிய வாகனங்களின் கொள்வனவுக்கோ சுகாதார அமைச்சினால் நிதி எதுவும் ஒதுக்கப்படுவதில்லை. வெளிநாட்டு நன்கொடைகள், தொண்டர் நிறுவனங்களின் உதவியுடனே இவற்றைச் செய்ய வேண்டும்.

வன்னிக்கான மருந்து விநியோகம் தொடர்பாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கொழும்பில் மாநாடு கூட்டப்படுகிறது. இந்த மாநாட்டில் வன்னிப் பகுதிக்குப் பொறுப்பான டாக்டர்களும் கலந்து கொள்கிறார்கள். அவர்களின் சிபார்சின் படி மருந்துவகைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த மருந்து வகைகள் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் அங்கிருந்து, வன்னிக்குக் கொண்டு செல்வதில் தாமதம் ஏற்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் மருத்துவ சபையின் அனுமதி பெறப்பட்ட பின்னரே வன்னிக்கான மருந்து வகைகள் அனுப்பப்படுகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு வழங்கக் கூடிய வகையில் திரிபோஷாமா இங்குதொடர்ந்து அனுப்புவதற்கான ஏற்பாடுகளை கொழும்பு திரும்பியதும் மேற்கொள்ளவுள்ளேன்.

தெல்லிப்பழையிலுள்ள புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தினைத் திறந்து வைத்து மீண்டும் இயங்கச் செய்வதில் சுகாதார அமைச்சு அக்கறை கொண்டுள்ளது. இதனை இயங்கச் செய்வது சம்பந்தமான திட்டமொன்றினை அமைச்சிடம் சமர்ப்பிக்கவிருக்கின்றேன்.

இப்படி அவர்மேலும் தெரிவித்தார்.

மூன்றுநாள் விஜயமொன்றினை மேற்கொண்டு கடந்த வியாழன் யாழ்ப்பாணம் வந்த பணிப்பாளர் ஜெகநாதன் யாழ். மருத்துவ சங்கத்தின் 11 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டதுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

தெல்லிப்பழையிலுள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தினை நேரில் சென்று பார்வையிட்ட அவர் யாழ். போதனா வைத்தியசாலையின் ஒவ்வொரு வார்ட்டுக்களையும் பார்வையிட்ட பின்னர் வைத்தியசாலையின் குறைபாடுகள் பற்றி நேரில் கேட்டறிந்து கொண்டார்.

## 92 பேருக்கு 5 ஆயிரம் ரூபா

கோண்டாவில் வடமேற்கு (ஜே-115) கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் சுமார் 92பேருக்கு மீளக்குடியமர்வு நிதியான 5 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளதாக கிராம அலுவலர் க. முருகையா தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை தமது அலுவலகத்தில் பார்வையிடலாம் என்றும் அவர் தெரிவித்தார். [ஐ-ரி]

## வீடுகளில் திருட்டு

சுன்னாகம் தெற்குப் பகுதியில் திருடர்கள் தொல்லை ஏற்பட்டுள்ளது. அண்மையில் இரு வீடுகளில் திருட்டு இடம் பெற்றுள்ளது.

ஒரு வீட்டில் இருந்து 18ஆயிரம் ரூபா பணமும், இன்னொரு வீட்டில் இருந்துபணம் மற்றும் சமையலறைப் பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

இரு வாரங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் 3 வீடுகளில் திருட்டு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-27)

## வன்னியால் வந்தோரில் மலேரியா நோயாளருக்கு நுளம்பு வலைகள்

வலிகாமம் தெற்கு, செப். 13 வன்னியில் இருந்து வந்த மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு யூனிசெவ் நிறுவனத்தால் நுளம்பு வலைகள் வழங்கப்பட உள்ளன.

மலேரியாத் தாக்கம் அதிகம் உள்ள பகுதிகளில் அவ்வப் பிரிவு பிரதேச செயலர் பிரிவினரின் ஆலோசனையின் பேரில் நுளம்பு வலைகளை விநியோகிக்க யாழ். மாவட்ட வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கோண்டாவிலில் அமைந்துள்ள சுகாதார வைத்திய களஞ்சியத்தில் இருந்து நுளம்பு வலைகளை பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

## இருநூறு மாணவர்களுக்கு பற்பசை, பற்தூரிகை

### லயன்ஸ் கழகம் வழங்கியது

வலி. கிழக்கு, செப். 13 நீர்வேலி, அச்செழு பகுதியில் உள்ள 200 பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பற்பசைகள், பற்தூரிகைகளை கோப்பாய் லயன்ஸ் கழகம் வழங்கியுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் கோப்பாய் லயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனை முகாமின் போதே மேற்படி மாணவர்களுக்கு பற்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பற்பசைகளும் பற்தூரிகைகளும் வழங்கப்பட்டன.

இம் முகாமில் வெளியார்கள் 257 பேருக்கு மருத்துவப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. (ஐ-180)


# STP COMPUTER WORLD

**No. 54A, Palaly Road, Kantharmadam, Jaffna.**

## OUR SERVICES

- Classes: Group & Individual Classes
- Sales: Computer & Accessories
- Software Developing: Financial, Communication, Multimedia & Web Design
- DTP: Type Setting & Stencilling
- Networking: Win NT Enviroment & Maintenance
- Repairs & Maintenance: Installations & Computer R epairs

## DIPLOMA IN COMPUTER STUDIES

- Fundamentals of Computer Studies
- Programming Technology & Structured Programming
- Introduction to Windows 95/98
- MS Word 97 / 2000
- MS Excel 97 / 2000
- Visual Basic Programming
- Introduction to Internet & E - Mail

DURATION 8 MONTHS

## DIPLOMA IN MS OFFICE

- Windows 95 / 98
- MS Word 97 / 2000
- MS Excel 97 / 2000
- MS Access 97 / 2000
- MS Power Point 97 / 2000
- MS Outlook 97 / 2000

DURATION 6 MONTHS

## ADVANCED DIPLOMA IN PROGRAMMING

- Windows 98 / NT
- Visual Basic 6.0
- Visual Foxpro 6.0
- Visual C++ 6.0
- Visual Java ++

DURATION 10 MONTHS

## CERTIFICATE COURSES

- Windows 95 / 98 / NT
- MS Word 97 / 2000
- Ms Excel 97 / 2000
- MS Power Point 97 / 2000
- MS Access 97 / 2000
- Visual Basic 6.0
- Turbo c ++
- Turbo Pascal
- Page Maker 6.0
- Corel Draw
- Visual Foxpro 6.0
- Internet & E-Mail

## KIDS

- Games
- Packages & Multimedia

விரிவுரைகள் ஆங்கிலத்தில், விரும்பிய மொழியில் விளக்கங்கள் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்

**10 DAYS FREE CLASSES!!!**

## FUNDAMENTALS OF INFORMATION TECHNOLOGY

- Introduction to Computer System
- Fundamentals of Hardware
- How to Operate the Computer
- Operating System Dos / Windows

குறிப்பு:
மாணவர்கள் இந்த இலவசக் கற்கை நெறியைக் கற்பதன் மூலம் திருப்தி ஏற்படின் தொடர்ந்து எந்தவொரு கற்கை நெறியையும் விசேட சலுகையுடன் கற்பதற்கு ஆவனசெய்து தரப்படும்.

கட்டணங்கள் ஏதும் இக் கற்கை நெறிக்கு அறவிடப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்,

**STP COMPUTER WORLD**
NO. 54 A, PALALY ROAD,
KANTHARMADAM,
JAFFNA.

(68997)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.13 யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. இம் மாதம் 5 ஆம் திகதி வரை விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப் பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

## யாழ்ப்பாணம்

கிருஷ்ணபிள்ளை (104204 ஏ), எம். கயல்விழி (109862 ஏ), எஸ்.கந்தவேள்(110251 ஏ), எஸ். செல்லையயா (081910ஏ), கே. சிவரட்ணம் (081910பீ), என். தயாபரன் (094368ஏ), என்.நவரட்ணம் (094368பீ), என். மேரி (094368சீ), பீ. அன்ரனி (096125ஏ), ஏ. மஞ்சுளா (096125பீ),

என். ஜெயராசா (098471 ஏ), ஜே எம். ரோசலின் (098471பீ),ஜே.பிலிப்ராஜா (098471சீ), ஜே. மிசார் (098471டீ), ஜே. பிறிசிலா (098471ஈ),எஸ்.மரியகிரேஸ் (098471எவ்), கே. பாலசுந்தரம்(098786ஏ), வை. ராணி (102357ஏ), வை. அடைக்கல மேரி (102357பீ), வை. அற்புதமலர்(102357சீ),

எஸ். காசிப்பிள்ளை (102552சீ), ஆர். பாக்சுமி (104617ஏ), எஸ். ராஜேந்திரன் (104617பீ). எஸ்.நடேசப்பிள்ளை(104777ஏ), என். மங்கயற்கரசி (104777பீ), என். கஜேந்தினி (104777சீ), என். பிரியதர்ஷனி (104777 டீ),என்.கமலினி(104777ஈ), கே. ஜெயானந்தன் (107058 ஏ), ஜே. பராசக்தி (107058 பீ), ஜே.மிரளினி(107058சீ),

எஸ். கதிர்காமநாதன் (107301 ஏ ), எம் ரி. முகமட்நவாஸ் (109127ஏ), எஸ், மகேஸ்வரியம்மா(109130ஏ). ஆர். ரவீந்திரன் (109165 ஏ), ஆர். வசீகரன் (109165 பீ), ஆர். ரேணுகா (109165 சீ), ஆர். லக்ஷிகா (109165 டீ), டபிள்யூ. எஸ். மனோகரி (109202 ஏ), எம். எஸ்.வின்சன் லோகு (109202 பீ), சீ. வி. ஜோண்சன் (109202 சீ), எஸ்.குகநாதன் (09269 ஏ),

ஏ. ஜெயசீலம்மா (109273 ஏ), ஏ. அலென்(109273பீ), ஜே. பெனாண்டோ (109397 ஏ), பீ. லிங்கநாதன் (109480 ஏ), கே. நாகேஸ்வரிதேவி (109532 ஏ), டாக்டர். ரீ. சூரியகுமார் (109554 ஏ), டாக்டர். என் சூரியகுமார் (109554 பீ), வீ. சுப்பையா (111085 ஏ), ஏ லோறன்ஸ் ரட்ணம் (112164ஏ), கே. பூபாலசிங்கம் (112297 ஏ), கே. கமலவதனா(112297பீ). பீ .மாசில்லா (112310 ஏ).

எஸ்.ரஞ்சனி (112357ஏ), எஸ். ஆர். சுலோஷனி (112357பீ), என். சுந்தரநாயகம் (112357சீ), எஸ.பீ. சரோஜினி (112357டீ). பீ. சுப்ரமணியம் (112408ஏ), வீ.காளிராசா (112411ஏ), எஸ். தேவராஜா (112415 ஏ), ரீ.தயாநிதி (112415பீ), ரீ. தேவராசா (112415சீ), ரீ. பிரதீப் (112415டீ) ரீ. கஜபிரிதா (112415ஈ).

கே. பரமேஸ்வரி (112430 ஏ),ஜே யேசுராஜன் (112480 பீ), பீ. ரி. யேசுதாசன் (112430சீ), எல்.ராமநாதன் (112468ஏ), ஆர்.ரவீந்திரன் (112468பீ), ஆர். மனோன்மணி (112480ஏ), எஸ். அஜித்(112480பீ), வீ.மனோகரன் (112482ஏ), ரீ.செல்லத்துரை (112494ஏ), எஸ். கோமளன் (112494பீ), பீ. சின்னத்தம்பி (112495)ஏ.

எஸ்.சந்திரகுமார் (112496 ஏ), பீ சந்திரகுமார் [112496 பீ], சீ. மேரி ரேமியா [112528 பீ], ஆர். பூலிங்கம் [112528 சீ], பீ. ஆர். ரவீந்திரன் (112531 ஏ], எல். பொணிபஸ் [112531 பீ], ரீ. துரைராசா [112555 ஏ], கே. தனரஞ்சன் [112564 ஏ], டீ. எம். மெட்டலின் [112577 ஏ], ஆர். செல்லையா (112609 ஏ), பீ. நாகராஜா (112618 ஏ),

எம். டீ. சுந்தரநாயகம் (112635 ஏ], எஸ் பீ.சேரன் லக்சுமி [112635 பீ], கே. நித்தியானந்தன் [112647 ஏ], எல். நித்தியானந்தன் [112647 பீ], எம். நித்தியானந்தன் [112647 சீ], கே. அமரராணி (112675 ஏ], கே. மாதுரி [112675 பீ], எஸ். புவனேஸ்வரி [112684 ஏ], வீ. நமசிவாயம்[112701 ஏ], வீ.ரோகினி [112701 பீ), வீ. கிருஷ்ணபிரியாஜினி [112701 சீ],

வீ. இந்திரபிரியாஜினி (112701 டீ), வீ. கிருஷ்ண பிரியசாந் (112701 ஈ), எஸ். சிவபாலன் (112724 ஏ), எம். அல்பிரட் (112733 ஏ), பீ, ஆறுமுகம் (112734 ஏ), பீ. கமலேஸ்வரி (112734பீ), எஸ் துஷ்பந்தன்(112738ஏ), எஸ்.கணிகசுந்தரம் (112738 பீ), ஆர். சீலர் (112739ஏ), டபிள்யூ. ஜோண் (112743 ஏ),

எஸ். நாகபூசணி (112748 ஏ), எஸ்.சரதிலகன் (112748 பீ), எஸ். காயத்திரி (112748 சீ), எல். நிமலன் யோசப் (112755ஏ), ஏ.எம்.எமில்டா (113787 ஏ), ஏ. டெலினா (113787 பீ), ஏ. றொகான் (113787 சீ), கே. றிச்சட் (113802 ஏ), ஈ.ராசரட்ணம் (113815 ஏ), வீ. மேரி ஸ்ரெலா (113828 ஏ).

ரீ. தேவராணி [113832ஏ], ரீ. தீலீபன் ]113832 பீ], ரீ. விஜயநாத் [113832 சீ[, ரீ, வதனி [1138332டீ], ரீ. மேகலா [113832ஈ] ரீ. சோபனா [113832 எவ்],

எஸ். சிவநாதன் [113851 ஏ], எஸ். சிவபானு [113851 பீ], வீ. கிரேஸ்[113872ஏ], வீ. யோகராஜா]113872பீ].

வீ. அன்ரனிராஜ் [113872 சீ], எல். ராசு [113889 ஏ]. எஸ். ஜெகநாதன் [113896 ஏ], கே.ஜனிதா[113896பீ], ஜே. சரிகா [113896 சீ] கே. பூமலர் [113897 ஏ], எம் சின்னத்துரை [113900ஏ], வீ. ஆருஷா [113900பீ], ஜ. தனபாலசிங்கம் [113904 ஏ], ரீ. கஜன் [113904 பீ), ரீ, கவீந்திரன் ]113904சீ],

கே. கணேசமூர்த்தி (113907ஏ).கே. காமரசேகர் (113907 சீ) கே. கலாராணி [113907பீ,] டாக்டர். சிவ. சிதம்பரம் (113909 ஏ) கே. யோகேஸ்வரி (113924ஏ ), கே. யோகேந்திரன் (113924 பீ), பீ ஜெயதேவி (11 3928 சீ), பீ. செல்லத்துரை (113934 ஏ), பீ. உமேஷ்வரன் [113951 ஏ), ரீ. சத்தியவதி (113952 ஏ), ரீ. தர்மினி [113952 பீ], என். செல்வராஜ் (113965ஏ)

பீ. இந்திரசேகர [11396 ஏ], எஸ். ஜே. அரியதாஸ் [113983 ஏ], ஜே ஏ மேரி மல்லிகா [113983 பீ], சீ. ஏ. ரோஸ்குயின், [113983 சீ], ஏ. ஏ.றோஸ்பீற்றர்[113983 டீ[, எவ். தயாளன் ]113997 ஏ], எஸ். சண்முகரட்ணம் [114002 ஏ], கே. ரதிகா [114024 ஏ], எல் எம். கிருஷ்ணபிள்ளை [114024 பீ], ரகுநாதன் [114041 ஏ]' ஏ. சொக்கலிங்கம் (114044 ஏ].

ஆர். நாகேஸ்வரி [114045 ஏ), ஆர். கலியாணி[114045 பீ], சீ. ராசலிங்கம் [114063 ஏ], எஸ். புவனேஸ்வரி [114070 ஏ], எஸ். யசோதரன் [114070 பீ], எஸ். பிரியதர்ஷினி [114070 சீ], ஜி. சதிசீலன் [114084 ஏ], எஸ். கீர்த்தனா [114084 பீ], எம். அல்பிரட் [114036 ஏ], எஸ். முருகையா [114090 ஏ], எஸ். துரைசிங்கம் [114102ஏ], ஆர். நிர்மலா [114102 பீ).

ஏ. சாகுல்ஹமீட் (114113 ஏ), என். அம்பலவாணர் (114134ஏ), ஆர். அனுசா (114163ஏ),1 ஆர். ஏ. புவனேஸ்வரி [1 4163பீ), ஆர். ஆனந்தகுமார் (114163சீ), ஆர். சகுந்தலா (114163டீ). கே. உதயராசா (114174 ஏ), எஸ். பிரதீபன் (114186 ஏ), எஸ்.சிவஞானம்[114186 பீ), எஸ். விக்னேஸ்வரராஜா (114213ஏ), எம்.கியூ. ரோசறி (114220ஏ)

எம். மரியான் (114221ஏ), ஏ. குலசேகரம் (114237ஏ), கே. சிவராணி (114237பீ), கே. கிருஷ்ணநிவியா(114237 சீ). டாக்டர் சி. சிறீரங்கநாதன் (114240ஏ), பீ. பெனடிற் (114242ஏ), ஜே நீற்றம்மா (114274ஏ), ஜே. டோமினிக் (114274பீ), பீ. நினோஜ் (114274சீ), ஜே. அட்னஸ் (114274டீ), ஜே. யேசுதாசன் (114274ஈ),

பீ.மகேந்திரன்(114275ஏ), என். எம். ஆன் யூலியாற் (115776ஏ), என். மாலினி (115776பீ), என். நிலானி (115776சீ), என். நிரோசின் (115776டீ), ஏ ஈ- அஞ்சலா (115788ஏ), என். பிரசான் (115798ஏ), எஸ் கணேசன் (115800ஏ), பீ ராசப்பூ (115846ஏ), ஆர். கிரேஸ் (115846பீ), பீ. சிவரஞ்சன் (115865ஏ).

எவ். ஜே. மைக்கல்(116086 ஏ), எம். சிவலிங்கம் (116089 ஏ), எஸ். கிறிஸ்ரியன் (116141ஏ), எம் ருவின் சலன்ஸ் (116141பீ) பீ. துரைராசசிங்கம்(116141சீ), கே. நடராஜா [116141டீ), ஆர். கதிர்காமு (116141ஈ), எஸ். கந்தையா[116141எவ்) எஸ். சிவாகரன்(116141ஜீ), ரீ கந்தையா (116141எச்), எஸ். கணேசன் (116141ஐ),

## ஊர்காவற்றுறை

எஸ். சதிவரன் ((11ஏ), எஸ். ரோகினி(11பீ), எஸ். சிலக்சனி (11சீ), எம். குணரட்ணம் (11டீ), ஆர். நல்லதம்பி (11334சீ), ஆர்.செல்லமுத்து (11334டீ),ஆர்.யோரஞ்சினி (11334ஈ), என் கதிராசி (11409ஏ), என் லோகநாயகி (11409பீ)' ஜே ஏ,எம்.ஆன் (11562ஏ)'

ஜே. ஏ. எம். அனிஸ்ரெலா (11562பீ), ஏ. ஜேம்ஸ் (11681ஏ), எஸ். நடராஜா (11684ஏ), என். அனிஷலி (11684பீ), ஈ, எம். ஜோசப் (11700ஏ), எல். விஜயா (11726ஏ), எல். லோகனி (11726பீ), எல். தீபா (11726சீ), எஸ் நவசோதி (11726டீ), ஏ. பரமேஸ்வரி (11726ஈ), ஜி.விஜயரட்ணம் (11743ஏ).

ஜீ பரமேஸ்வரி(11743 பீ), ஜீ. விமலேஸ்வரி (11743 சீ), கே.பீ. மகேந்திரா(11761ஏ), எஸ். அன்னலட்சுமி (11780 ஏ), எம். பிரான்சிஸ்சேவியர் (11796 ஏ), எம். சேனாதிராசா (11818 ஏ), ஆர். சண்முகராஜா (11819 ஏ), எஸ். கிருஷ்ணபிள்ளை (11820ஏ), எக்ஸ். பவுலின் (11837 ஏ), எக்ஸ். விக்ரர் (11837 பீ).

ரீ. அனுஷா (11837 சீ), ரீ. ரீ. செலியன்(11839 ஏ),என். எஸ். விக்னராஜ் (11840 ஏ), என். மோகனா (11840 பீ), வீ. நாகமணி(11847 ஏ). பீ. தம்பையா (11851 ஏ), கே, ஆறுமுகநாதன் (11853 ஏ), ஏ கணபதிப்பிள்ளை (11868 ஏ), ஏ. நவமணி (11868 பீ), ஏ. பாக்கியம் (11871 ஏ), ஏ ஜெயந்தினி (11871 பீ). கே. கௌரீசன் (11871 சீ), எஸ். ஜெனர்வினா (11931 ஏ), ஏ. ஜரிஸ் (11931 பீ), எஸ். சுதீபன் (11931 சீ), ஈ. டிக்சன் (11931 டீ).

கே. கணேசமூர்த்தி (115884ஏ), ஆர்.கருணாநிதி (115893ஏ), சிஸ்ரர். ஜே. மைக்கல் (115905ஏ), ரீ. சோணையா(115920ஏ), கே. ஏ.பெனாண்டோ (115932 ஏ), பீ. புவனேஸ்வரி (115961ஏ), ஏ. எம். எல். தேவராஜா (115967ஏ), ரீ. மென்மொண்ட் (115995ஏ), ரீ.தர்ஷனா (115995பீ), ரீ. கோபாலசிங்கம் (116006ஏ). ஜே திரவியம் (116913ஏ)

கே.அப்புத்துரை (11601' ஏ), ஏ. சி. ஜெயராமன் (116026ஏ), ரீ. தீபா (116026பீ), டாக்டர் ஈ.எம். எஸ் எக்கநாயக்க (116044 ஏ), பீ. தங்கபாண்டி (116052ஏ), பீ. தனுக்கொடி (116054ஏ), வீ. செல்வரட்ணம் (11055ஏ), ரீ. சுப்ரமணியம் (116056ஏ), எம். நாகேஸ்வரி (116057ஏ), பீ. பசுபதி (116068ஏ) கே. விசுவலிங்கம் (116071ஏ).

## சமய அறிவுப் போட்டி

கொழும்புத்துறை, செப். 13 காரைநகர் நீலிப்பந்தனை அம்பாள் சனசமூக நிலையம் அகில இலங்கை சைவசமய அறிவுப் போட்டியை நடத்தவுள்ளது. (ஐ-30)


**கண்ணீர் அஞ்சலி**

**குணசிங்கம் ஞானேந்திரன்**
(குட்டி - கண்ணன்)
(உரிமையாளர், கோபிகா ஆடையகம்)

அவர்களின் மறைவை முன்னிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அல்லி சில்க்ஸ்**
106,பெரியகடை, யாழ்ப்பாணம்.
(68970)

**நெஞ்சகலா நினைவஞ்சலி**

**குணசிங்கம் ஞானேந்திரன்** (கண்ணன்)
(உரிமையாளர், கோபிகா ஆடையகம்)

நண்பனே!
எம் கண்ணெனும் மரத்தில் மலர்ந்த
கண்ணீரெனும் பூக்களை உனக்குக்
காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் உன் நினைவோடு
யாழ், நகர் மைய றோட்டரக்ட் கழகம்
(68985)

**வைத்தியம்**

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2ஆம்
குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(68982)

**பிற்போடப்பட்டுள்ளது**

யாத்திரிகை ஸ்தலமான வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய திருநாள் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அருட்திரு. யே. யே. மவுலிஸ்
பரிபாலகர்
(68963)

**கண்ணீர் அஞ்சலி**

எமது நண்பரான
**குணசிங்கம் ஞானேந்திரன்**
(உரிமையாளர், கோபிகா ஆடையகம்)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மலர் பிளாசா**
இல. 2, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(68965)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org